உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பாலபாடங்களே

இந்துசாதனம்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ந் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஹூ ஆடிமீ ௫ உ (1942 ஜூலாய் 20 திங்கட்கிழமை) [இலக்கம் ௨௮]

அப்பய்ய தீக்ஷிதர் வரலாறு

[ஆசிரியர் க வை. ஆத்மநாதசர்மா]

(முற்றொடர்)

வலக்கையில் அக்கினியைக் காட்டியது

சின்னப் பொம்ம அரசனது சபைப் புலவராகவுள்ளவர் தாத்தாசாரியார் என்பவர். அவ்வரசனது மனப் பூர்வமான வேண்டுகோளுக்கிணங்கி அவனைச் சீடனாக ஏற்று உபதேசம் செய்துவந்தவர் தீக்ஷிதர் பெருமானவர்களாவர். அரசன் அவ்விருவரையும் அவரவருக்கு ஏற்றஅளவு கௌரவத்துடன் சபையில் வீற்றிருக்கச் செய்வான். தீக்ஷிதரவர்கள் தமக்கு வேண்டாத கருமங்களிற் பிரவேசிக்கும் வழக்கமே இல்லாதவர். எனினும் தாத்தாசாரியாரவர்களது மனம் துப்புரவாக அமையவில்லை. எவ்விதத்திலாயினும் தீக்ஷிதரவர்களிடம் குற்றங்கற்பித்து, அரசனது மனத்தைப் பேதப்படுத்துவதற்கேற்ற தருணத்தை எதிர்பார்த்து வருவாராயினர்.

இவ்வாறாக, தீக்ஷிதரவர்கள் அரசனை ஆசீர்வதிக்க வேண்டும்போதெல்லாம் தமது இடக்கரத்தை உயர்த்தி ஆசி கூறுவது வழக்கம். ஒருநாள் அரசன் தனித்திருக்கும் சமயத்தில் தாத்தாசாரியார் அவனிடஞ் சென்று, "அரசே! பிராமணர்கள் தங்களைப் போற்றி வணக்குகிறார்கள். கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களான அந்தணர்கள் ஆசி கூறுவது வழக்கம். எனினும் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் தங்களை ஆசீர்வதிக்கும் போதெல்லாம் அலக்ஷியமாகத் தமது இடக்கரத்தை உயர்த்துவது அவரது இறுமாப்பினாலன்றோ!" என்றார். அரசன் அவரது உள்ளக் கிடக்கையை யுணர்ந்தவனாய்ப் புன்சிரிப்புச் செய்து கொண்டு அவருக்கு அநுமதி கொடுத்தபின் அவருக்கும் அவரைப்போன்ற சிலருக்கும் புத்தி புகட்ட வெண்ணினான்.

மற்றைநாள் எல்லாரும் நிறைந்துள்ள சபையிலே, அரசன் தீக்ஷிதரவர்களைப் பார்த்து, "சுவாமி! தாங்கள் ஆசிகூறும் போதெல்லாம் இடக்கரத்தை உயர்த்துவதன் பொருளைக் கூறியருள வேண்டும்" என்றான்.

அவர்கள் அரசனைப் பார்த்து "அரசே! அந்தணர்கள் காலைதோறும் அக்கினி காரியஞ் செய்ய வேண்டியவர்கள். அவ்வாறு அக்கினி ஹோத்திரம் செய்பவர்களது வலக்கரத்தில் அக்கினி அமைந்திருக்கிறது. அதனால் அக்கரத்தையுயர்த்தி ஆசீர்வதித்தலாகாது. அவ்வாறு செய்தால் அவ்வக்கினியால் ஆசிபெற்றவர்களுக்குத் தீங்குண்டாகும். ஆகையால் பிராமணன் ஏனைய வருணத்தாரை ஆசீர்வதிக்கும் போதெல்லாம் இடக்கரத்தை உயர்த்துவதே அறநெறியானது" என்றார்.

அப்போது அரசன், தாங்கள் கூறியபடி தங்கள் வலக்கரத்தில் அக்கினியைக் காட்டினால் சபையார் ஐயமின்றி ஒப்புவர் என்றான். உடனே தீக்ஷிதரவர்கள் தமது வலக்கரத்தை நீட்டி ஒருமுறை அதனை அருகேயோட்டினார்கள். உடனே சூரியகாந்தக் கல்லினின்று அக்கினி தோற்றுவது போலவே அக்கரத்தில் தீப்பற்றி எரிந்தது. அதனைக் கண்டவர்கள் அச்சமும், வியப்பும், அன்பும் ஒருசேர உதிக்கப் பெற்றார்கள். அரசன் தீக்ஷிதரவர்களைப் பார்த்து வியந்து துதித்து அவ்வக்கினியைத் தணிக்கும்படி வேண்டவே அவர்கள் அதனைக் கணத்தில் மறைத்தருளினார்கள்.

சிவார்ச்சனா சந்திரிகையை இயற்றியது

தீக்ஷிதரவர்களுக்கு நீலகண்ட தீக்ஷிதர் முதலாக மூன்று புதல்வர்களும், மரகதவல்லி மங்களாம்பாள் என இரு புதல்விகளும் இருந்தார்கள். அவர்களெல்லோரும் இளமையிலேயே ஆன்மார்த்தமாகச் சிவபூஜை எழுந்தருளப் பண்ணிக் கொண்டார்கள். உடையவர் பூஜை செய்யாமல் அவர்கள் உண்பதில்லை. அம்மகளிரையும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களும் சிவபூஜா துரந்தரர்களுமான நல்ல மரபினுள்ள அந்தணர்களுக்கே மணஞ் செய்து வைத்தார்கள்.

இளைய மகளாகிய மங்களாம்பாள் ஒரு போது வீட்டுக்கு விலக்காக இருந்த சமயத்தில் தான் வழமையாகச் செய்து வந்த சிவபூஜைக்குத் தடை நேர்ந்ததே என்று கவலைகொண்டு தான் செய்யத் தக்கது யாதென்று பிதாவைக் கேட்டாள். அவர் பாஹ்ய பூஜை செய்யத் தடை நேர்ந்தாலும், மானசிக பூஜை செய்யலாம் என்று கூறினர். அவ்வம்மையாரும் அவ்வாறே செய்து வந்தார்கள்.

இந்த விஷயமும் அரசனது செவிக்கு எறவே, தீக்ஷிதரவர்களை அவன் வணங்கி, "குரவபெருமானே! அடியேனுக்கும் உடையவர் பூஜையின் முறைகளை விளக்கமாகக் கூறியருள வேண்டும்" என்றான். தீக்ஷிதரவர்கள் அரசனைப் பார்த்து, "உள்ளன்பில்லாமல், உலகத்தார் பாராட்டும்படி ஆடம்பரமாகப் புறப்பூஜை செய்வதிலும், நிர்மலமான மனத்தினுற் செய்யும் பூஜையால் பரமசிவனது திருவருளை இலகுவிற் பெறலாம். சாக்கிய நாயனார் கல்லினால் எறிந்தபோது செய்தது யாது! கண்ணப்ப நாயனார் தனது உச்சிட்டமான இறைச்சியைக் கொண்டு செய்தபூஜை எப்படிப்பட்டது? பிரமன் பூமரங்களிற் பூக்கள் நிறைந்திருப்பக் கண்டபோது 'இவையெல்லாம் சிவார்ப்பணமாகுக' என்று நினைந்து செய்தது யாது? இவை மானசிக பூஜைகளன்றோ! இந்தப் பூஜை விஷயம் சாதி வருணாச்சிரம ஆசார வரம்புக்குட்படாதது. இது யாவருக்கும் சமமானது. சாஸ்திர தத்துவ மறியாதவர்களே இதனை வெறுப்பர். எந்தப் பருவத்தில் சிவபூஜைசெய்ய வேண்டுமென்று இச்சையுண்டாகிறதோ அந்தக் கணமே தொடக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

"சாவம வியர்த்தம்,
மரணம் சித்தம்
தன்மாத் சுபயம்
பஜபஜ கிரியம்"

மனிதன் செய்துவரும் வேறு செயல்களெல்லாம் வீணானவை, மரணமோ நிச்சயமானது, அதனால் சாம்பசிவனை எப்போதும் வழிபட்டு வருதல் வேண்டும். உயிர் நீங்கும் வரையும் தொடங்கிக் கொண்ட சிவபூஜையையும் அக்கினி ஹோத்திரத்தையும் விட்டுவிடுதலாகாது" என்று இந்த உண்மைகளை விளக்கியருளினார்கள். இவற்றையெல்லாம் கேட்டிருந்தவனாகிய அரசன் உடனே தானும் சிவபூஜை செய்ய வேண்டுமென்று நிச்சித்துக் கொண்டு அது முதலாக உடையவர் பூஜை செய்வதில் ஈடுபட்டான். அவனுடைய வேண்டுகோளுக்கு இயைந்த 'சிவார்ச்சனா சந்திரிகை' என்ற நூலை ஆக்கிக் கொடுத்தார் தீக்ஷிதர் பெருமான். அந்த நூலின் முடிவுரையில் "வேலூரை இருப்பிடமாகக் கொண்ட சின்னப்பொம்ம அரசனின் கேள்விப்படி இந்தச் சிவபூஜாவிதி சிவபெருமானுடைய ஆணையாற் செய்யப்பட்டது" என்று கூறப்பட்டிருக்கிறது.

சிவார்க்கமணி தீபிகை

சிவபக்தனான சின்னப் பொம்ம மன்னனது வேண்டுகோளினுக்கு தீக்ஷிதரவர்கள் ஸ்ரீகண்ட பாஷ்யத்திற்கு விரிவுரையாக சிவார்க்கமணி தீபிகையைச் செய்தார்கள். அதனை அரங்கேற்றியபோது அரசன் அவருக்குக் கனகாபிஷேகம் செய்தான்.

மேலும் தீக்ஷிதமணியவர்கள் சிவதத்வ விவேகம், சிவகர்ணாமிருதம், சிவத்யானபத்ததி, ஸ்ரீகண்டபாஷ்ய தீபிகை, சிவாத்வைத நிர்ணயம், சிவார்த்தபல்ம வாதாவளி, ஆதித்யஸ்தவரத்னம், ஆத்மார்ப்பணம், மானசோல்லாசம், பிரும்ம தர்க்கஸ்தவம் முதலிய நூல்களை இயற்றித் தமது சிஷ்யர்களுக்கும் போதித்தார்கள்.

'அடிமைவாழ்வைவிட அழிவே மேல்'

'என்னையா நீரோவுடன் ஒப்பிடுவது?'

பதட்டமான கேள்விக்குக் காந்திஜி பதில்

ஆமதபாத், ஜூலை 12—

ரோமாபுரி தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கையில், நீரோ உல்லாசமாகப் பிடில் வாசித்துக்கொண்டிருந்தார். அவ்விதமே தங்களால் அணைக்க முடியாத ஒரு தீயைத் தாங்கள் மூட்டிவிட்டுச் சேவாக்கிராமத்தில் உல்லாசத்துடன் உலாவிக் கொண்டிருக்கப் போகிறீர்களா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, மகாத்மா இன்றைய 'ஹரிஜன்' பத்திரிகையில் பின்வருமாறு பதில் கூறியிருக்கிறார்:—

மகாத்மா பதில்

நான் மூட்டும் தீ மட்டும் அணையாமல் கொழுந்துவிட்டு எரியுமானால் அப்போதுதான் எனக்கும் நீரோவுக்குமுள்ள வித்தியாசம் தெரியும். அந்தத் தீ ஒரு கட்டுக் கடங்காவிட்டால் நான் உல்லாசமாகச் சேவாக்கிராமத்தில் உலாவிவராமல் நான் மூட்டிய தீயில் நானே விழுந்து மடிவதைக் காண்பீர்கள். நிருபர் இவ்விதம் கூறியது எனக்கு வருத்தத்தையே தருகிறது. நெருக்கடியை கடினத் தீர்க்க நான் முயலுவதால் நேரிடக்கூடிய காரியங்களுக்காக என்மீது குற்றஞ்சுமத்துவானேன்? அதோடு நான் உயிருடன் வாழ்வதற்கே முக்கியமான ஒரு நிபந்தனையாக அது அமைந்துவிட்ட இந்தச் சமயத்தில் அதற்கு ஆக்ஷேபமேன்?

விடுதலைக்கு முயல்வது தவறு?

நம்மை ஆளுவோர் பள்ளிக்கூடங்களில் நாம் வாசிக்கும்போதே 'பிரிட்டானியர் எப்போதும் அடிமைகளாக வாழமாட்டார்கள்' எனப்பாடுவதற்கு நமக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள். பிரிட்டிஷார் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ள இப்போது தண்ணீரைப்போல ரத்தத்தைச் சிந்தி வருகின்றனர். பணத்தை வெறும் மண்ணைப்போல வாரி இறைக்கின்றனர். அவ்விதமிருக்கையில் அவர்கள் இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் மட்டும் அடிமைப்படுத்தி வைத்திருப்பது நியாயமா? அடிமை வாழ்விலிருந்து, விடுதலை பெற இந்தியர் மட்டும் பிரிட்டிஷாரை விடக் குறைவாக முயல வேண்டுமா? பிணம்போன்ற இந்த அடிமை வாழ்வைவிடச் சாவு அழிவே மேல் எனநினைத்து வேதனையினின்று மீட்சிபெற நடவடிக்கைகள் நடத்தும் ஒருவனையா நீரோவுக்கு ஒப்பிட்டுச் சொல்வது? அவ்விதம் ஒப்பிடுவது வார்த்தைகளைத் துர்ப்பிரயோகம் செய்வதாகும்.

மிட்வே யுத்தத்தில் சத்துரு நஷ்டங்கள்

275 விமானங்களும்
92 யுத்தக்கப்பல்களும்
4800 வீரர்களும்

வாஷிங்டன் ஜூலை 15—

ஜூன் மீ 4ந் திகதியும் 6ந் திகதி மிட்வே யுத்தத்தில் நான்கு ஜப்பானிய விமானமேற்றும் கப்பல்களும் இரண்டு பெரிய குரூய்ஸர்களும் மூன்று நாசகாரிகளும் ஆழ்த்தப்பட்டன வென்று ஒரு கடற்படை இலாகா அறிக்கை கூறுகிறது.

யோர்க்டவுண் என்னும் அமெரிக்க விமானமேற்றும் கப்பல் பழுதாக்கப்பட்டது. ஹமான் என்னும் அமெரிக்க நாசகாரி டோர்ப்பிடோக் குண்டினால் தாழ்க்கப்பட்டு மூழ்கிறது. 275 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 4800 ஜப்பானியர் கொல்லப்பட்டனர் அல்லது கடலில் மூழ்கினர்.

அமெரிக்க 92 அதிகாரிகளையும் 223 படைவீரர்களையும் இழந்தனர். மூன்று ஜப்பானிய யுத்தக் கப்பல்களும் நான்கு குரூய்ஸர்களும் பல நாசகாரிகளும் சேதமடைந்தன.

காங்கிரஸ் தீர்மானம்

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையின் அபிப்பிராயம்

லண்டன் ஜூலை 15—

இந்திய தேசியக் காங்கிரஸின் டோக்கியோ பெர்லின் ரோம் முதலிய இடங்களில் சந்தோஷத்தோடு வரவேற்கப்படும் சுங்கின் மொஸ்கோ வாஷிங்டன் முதலிய இடங்களில் வருத்தத்தோடும் அவநம்பிக்கையோடும் இது கவனிக்கப்படும் என்று லண்டன் 'டைம்ஸ்' இன்று மிஸ்டர் காந்தியின் வழி என்ற மகுடத்தின் கீழ் எழுதிய ஒரு தலையங்கத்திற் கூறியிருக்கிறது. அப்பத்திரிகை மேலும் எழுதுவதாவது:—

"இந்தியா சுதந்திரத்தை அடைவதற்கான ஒரு கொள்கையை நடத்தி வைக்கப் பிரிட்டன் உறுதி கொண்டிருக்கிறது. சத்துருவை முறியடித்தபின், கூட்டப்படும் சுயநிர்ணய சபையில் பல்வேறு கட்சிகளுக்கிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்பதே நாம் இந்தியாவின் சுதந்திரத்திற்கு விதித்திருக்கும் ஒரே நிபந்தனையாகும்.

காங்கிரஸ் தலைவர்கள் தாங்கள் கொண்டுவரும் முறைகளால்தான் உண்மையில் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைத் தடைசெய்து வருகிறார்கள். சில சந்தர்ப்பங்களிற்

தொடர்ச்சி 6-ம் பந்தி

5ம்-பந்தித் தொடர்ச்சி

சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுமென்று இத் தீர்மானம் பயமுறுத்துகிறது. இதுவரை சட்டமறுப்பு இயக்கங்களினால் இந்தியாவிற்கு லாபமே ஏற்பட்டதில்லை. இப்பொழுதும் ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆயின், இதனால் உள்நாட்டில் குழப்பமும் ஒற்றுமையின்மையுமே ஏற்படும்.

மகாத்மா காந்தியின் திட்டம்

பண்டித ஜவஹரின் புதிய யோசனை

அகில இந்தியக் கமிட்டிக்குச் சிபார்சு

வார்தா ஜூலை 10

இன்று மகாத்மாவின் விடுதியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி மீண்டும் கூடி காந்திஜி தயாரித்த நகல் தீர்மானத்தைப் பற்றி மேற்கொண்டு விவாதித்தது. இன்னும் சில அங்கத்தினர்கள் இன்று தங்கள் கருத்தை வெளியிட்டனர். கமிட்டி இன்று பிற்பகல் கூடியபோது பண்டித ஜவஹர் வேறு ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். அதில் பிரிட்டிஷார் வெளியேற வேண்டுமென காந்திஜி வெளியிட்டுள்ள கோரிக்கையை அவர் திட்டமாக விளக்கியிருந்தார். இந்தக் கோரிக்கை நிறைவேறுவதற்குப் படிப்படியாகப் பல யோசனைகளையும் வெளியிட்டிருக்கிறார். இந்தப் புதிய தீர்மானத்தைப் பற்றியும் இன்று விவாதம் நடந்தது. கமிட்டியினர் பண்டிதர் பிரேரணையை ஏற்றுக் கொள்ளுவது சந்தேகம் தான். ஆனால், அதில் அடங்கியுள்ள சில யோசனைகளைக் காந்திஜியே ஏற்றுக் கொள்வார் எனத் தெரிகிறது. முக்கியமாகப் பிரிட்டிஷார் வெளியேறுவதைப் பற்றிய பாகத்தை மகாத்மா அங்கீகரிப்பார் எனத் தெரிகிறது. நாளை மீண்டும் காரியக் கமிட்டி கூடும். அப்போது தீர்மானம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படுமெனத் தெரிகிறது. அகில இந்தியக் காங்கிரஸ்கமிட்டிக்குச் சிபாரிசு செய்யும் முறையில் காரியக் கமிட்டி இப்போது தீர்மானம் நிறைவேற்றுமென்றும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அந்தச் சிபார்சை [illegible] மெய்யச் சீக்கிரத்தில் கூட்டப்படலாம் என்றும் தெரிகிறது.

காந்திஜியின் தீர்மானத்திலடங்கிய பற்பல அம்சங்களையும் விவாதித்து அங்கத்தினர்கள் வரும் திருப்தியடைந்தபின் ஏகமனதாக அதை நிறைவேற்றுவார்களென்றே தெரிகிறது. பொதுவாக அத்தீர்மானத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து பூரணமாக மறைய வேண்டுமென்றும் வார்தாவிலும் பார்லிமெண்டிலும் நிறைவேற்றியதீர்மானங்களை வர்ஜிதம் செய்வதாகவும், சுதந்திரம் பெற்ற இந்தியா தான் நாட்டைக் காக்கவும் நேச தேசங்களுக்கு உதவவும் முடியுமென்றும் இந்த நெருக்கடியில் காந்திஜி தலைமை ஏற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

நேச தேசங்களுக்கு அறிக்கை

காரியக் கமிட்டியின் விண்ணப்பத்துக்கு இணங்கக் காந்திஜி தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டால், அவரது வழக்கம்போல் அவர் காரியக் கமிட்டியின் தீர்மானத்தையும் நாட்டினர் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் நாம் செய்ய உத்தேசித்திருக்கும் காரியங்களையும் விளக்கி வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதுவார். நேசதேசங்கள் அனைத்திலும் முக்கியமாக அமெரிக்கா இப்போது இந்திய ராஜ்ய விஷயத்தில் செலுத்தும் சிரத்தையையும், கர்னல் ஜான்ஸன் இந்தியாவில் ஸர். கிரிப்ஸ் இருந்தபோது செய்த முயற்சிகளையும் தலைவர்கள் மறக்கவில்லை. பண்டித நேருவிடமிருந்து கர்னல் ஜான்ஸன் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு ஒரு கடிதம் எடுத்துச்சென்றதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே காந்திஜி காரியக் கமிட்டித் தீர்மானத்தையும் தாம் செய்ய உத்தேசித்திருக்கும் காரியங்களையும் நேச தேசத்தினருக்கு அறிவிப்பார் என்றும் தெரிகிறது. முக்கியமாக ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்குக் காந்திஜி ஒரு அறிக்கை அனுப்புவார். இவ்விதம் செய்வது சில தலைவர்களுக்குப் பிடிக்கவில்லையானாலும் பிரிட்டிஷ் சர்க்கார் வாளா விருப்பதால் வேறு வழியில்லையென்றே அவர்கள் கருதுகிறார்கள். கிரிப்ஸ் தூதின பயனாக நிலைமையே மாறிவிட்டதாகவும் பூரணசுயேச்சை அளிக்காவிட்டால் சங்கடமான திருப்தி ஏற்படாதென்றும் தலைவர்களில் சிலர் கருதுகிறார்கள். மற்றும் சிலர் இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷாருக்கு எவ்வித சங்கடமும் விளையக்கூடாதென்றும், மீண்டும் சமாதானத்துக்கு முயல வேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்கள். சமரசத்துக்கு முயல இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏதோ ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் ஒரு வதந்தி இங்கு உலவுகிறது. பிரிட்டிஷ்ஜினம்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

நெருக்கடியிலும் நிதானம்

எகிப்து மக்களின் மனோபாவம்

கெய்ரோ ஜூலை 14—

எகிப்துக்கு இவ்வளவு நெருக்கடியான நிலை ஏற்பட்டிருந்தும் அந்நாட்டு மக்கள் நிதானமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆபத்து இன்னும் நெருங்கினால் அவர்கள் என்ன செய்வரென்பது பற்றிச் சந்தேகமில்லை. எகிப்து பிரதம மந்திரியும் அவரது தோழர்களும் மிக்க விசுவாசத்தோடு நடந்துகொண்டுவருவதைப் பிருத்தானிய அதிகாரிகள் பாராட்டுகின்றனர்.

இங்குள்ள தனிப்பட்ட பிருத்தானிய மக்களும் ஆபத்தை நன்குணர்ந்தும் சிறிதும் நிதானந் தவறாமல் நடந்து கொண்டு வருகின்றனர். என்ன நேர்ந்தாலும் இவ்விடத்திலேயே இருப்பதென்ற உறுதியுடன் இருந்து வருகிறார்கள்.

அரசாங்கத்துக்கு ஞானோதயம் ஏற்படும் வரையில்

மக்கள் பட்டினி கிடக்க முடியாது என்கிறார் மகாத்மா

தானிய நெருக்கடி தீர வழி

வர்த்தக சமூகத்தினரின் கடமையைச் சுட்டிக் காட்டுகிறார்

ஆமதாபாத், ஜூலை, 12—

"உயர் வகுப்பைச் சேர்ந்த ஏழைகள் தானிய வியாபாரிகளைப் பற்றிப் புகார் செய்து எனக்குப் பரிதாபமான முறையில் கடிதங்கள் எழுதி வருகின்றனர். 'தானியங்களை விற்காத நிலைமையில் நாங்கள் என் இவ்வியாபாரிகளுக்கு ஊழியம் புரிய வேண்டும்; இவர்களிடம் சரக்குகளிருக்கின்றன. எனினும், அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைவாசிகளைக் காட்டிலும் அதிகப்படியாகக் கொடுத்தால்தான் இவர்கள் எங்களுக்குச் சரக்கு விற்பார்களாம். எங்களால் கொடுக்க முடியாத விலைகளை அவர்கள் கோருகின்றனர். ஒன்று பட்டினி கிடக்க வேண்டும், அல்லது கொள்ளையடிக்க வேண்டும்; இதைத் தவிர நாங்கள் 'வேறென்ன செய்ய முடியும்? இதுவே மேற்படி கடிதங்களின் சாரம்" என்று இன்றைய ஹரிஜன்" பத்திரிகையில் மகாத்மா காந்தி எழுதியிருக்கிறார்.

யார் பொறுப்பாளி

விவரம் பின்வருமாறு:—

இந்தப்புகார் எங்கும் வியாபித்திருக்கிறது; இது நியாயமான புகார்தான். இத்தகைய நிலைமைக்கு அரசாங்கந்தான் பிரதான பொறுப்பாளி, அவர்கள் தானியங்களை வெளியே அனுப்பிவிட்டு இப்பொழுது நாட்டில் எஞ்சியுள்ள சரக்கைக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க வழிதெரியாமல் விழிக்கின்றனர். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். தபாலாபீஸ்களைப் போல் தானிய ஆபீசுகளும் ஏற்பட வேண்டும். முத்திரைவாங்கிக் கொள்வது போல் ஜனங்கள் இவற்றிலிருந்த தானியங்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அரசாங்கத்துக்குப் புத்தி உதயமாகிக் கொண்டிருக்கையில் ஜனங்கள் பட்டினியால் வாடமுடியாது. ஆகவே, வர்த்தக சமூகத்தினர் தான் பிரச்னையில் கவனம் செலுத்த வேண்டும். ஏழைகளுக்கு நியாயமான விலைக்குத் தானியங்கள் தட்டாமல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். சமூக நன்மையை முன்னிட்டுச் செய்யப்படும் இத்தகைய எந்தக் காரியத்திலும் அரசாங்கம் தலையிட முடியாது. வியாபாரிகள் தங்கள் கடமையைச் செய்வது அரசாங்கத்துக்கு உண்மையில் உதவியாகும். வியாபாரிகளிடையே ஒத்துழைப்பு இருந்தால் தான் இவ்வேலையைச் செய்யமுடியும். ஆனால் சிலமாகாணங்களிலோ அல்லது ஜில்லாக்களிலோ வேலையை ஆரம்பித்து விடலாம். பசிவந்தால் சட்டம் பறந்துபோம்; காலா காலத்தில் கருணையுடன் கூடிய நடவடிக்கைகளில் இறங்காவிட்டால் நாடெங்கும் தானியம் சம்பந்தமாகக் கலவரங்கள் ஏற்படுவது நிச்சயம்.

அச்சுநாட்டினருடன் யுத்தஞ் செய்தாற் சுதந்திரமடையலாம்

சுங்கிங் ஜூலை 14—

ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:—

இந்தியப் பிரச்னை சமாதானமாகத் தீர்க்கப்படுமென்ற நம்பிக்கையைத் தெரிவித்து, 'க்யூபின் கபோ' என்னும் சீனப் பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது.

இந்தியாவை ஜப்பானியர் ஆக்கிரமித்துக் கொள்வார்களேயாயின், இந்தோ-சீனா, மலேயா முதலிய நாடுகளுக்கு நேரிட்டிருக்கும் கதியே இந்தியாவிற்கும் ஏற்படுமென்று அது கூறுகிறது. மேலும் கூறுவதாவது:— ஜப்பானியர் ஆட்சியில் காந்தியோ நேருவோ இருக்க முடியாது. இந்திய தேசீய ஒற்றுமை எதுவும் இருக்க முடியாது.

அச்சுநாடுகளை எதிர்த்துப் போராடுவதின் மூலமே இந்தியா சுதந்திரத்தைப் பெற முடியும்.

பிருத்தானிய கொள்கையைப் புனராலோசனை செய்யும்படி பிருத்தானிய இராஜதந்திரிகளையும் அப்பத்திரிகை கேட்டுக் கொள்ளுகிறது.

வலிகாமம் கிழக்கு கிருஷிக பழமரச்சுகாதாரகைப்பணி உணவுக் காட்சி

கிராமப் பகுதிகளில் முதல் முதலாகத் தொடங்கிய இக்காட்சி, புத்தூர் கிராம அபிவிருத்தி நிலையவளவினுள் 1942 ம் ஜூலை மாசம் 28,ம் 29 ம், 30 ம் திகதிகளில் நடைபெறும். கைத்தொழில் வர்த்தகப் பகுதி, கிருஷிப் பகுதி, ஐக்கிய சங்கப்பகுதி, சுகாதாரப்பகுதி, வித்தியாபகுதி, பொதுசனப் பாதுகாப்புப் பகுதி ஆதிய பகுதிகளின் உதவியையும் பொதுசனங்களின் உதவியையும் கோரி நடத்தப்படுகின்றது. தற்போதுள்ள நெருக்கடி காரணமாக எடுத்த இன்னல்களை நீக்க இக்காட்சி பெருதவி அளிக்கும் என்பதை வற்புறுத்த வேண்டியதில்லை.

மேற்படி காட்சி விபரங்களை அறிய விரும்புவோர் இணைக்காரியதரிசிகளை வினவி அறிக.

1 கிருஷிகம்: தானியவகை,புகையிலை, கிழங்குவகை, காய்கறிவகை, வெங்காயம், மிளகாய் முதலியவற்றில் முதற்றரமானவையும், சோதி (R. I. R., W. L, பறைச்சாதி) ஆதிமாடு எனபவற்றில் நல்லினங்களும் அழைக்கப்படுகின்றன.

புல்லினம், ஏகோத்திர நெல் முதலிய நெல்லினங்கள், மாதிரிக் கலப்பை, வேளாண்மை ஆயுதங்கள் காட்சியில் வைக்கப்படுவதோடு முளையோட்டு ஆப்போட்டு முதலியனவும் செய்து காட்டப்படும்.

2 பழமரச்செய்கை: பல இனப் பழவகைகள் (மா, பலா, வாழை, தோடை, எலுமிச்சை, மாதுளை, வற்றாளை, அன்னாசி) போட்டிப் பொருள்களாகக் காட்சிக்கு ஏற்கப்படும்.

3 சுகாதாரம்: சுகாதார வைத்தியப் பகுதியாரின் பொருள்கள் காட்சியில் வைக்கப்படும். பின் வருபவற்றுக்குப் பரிசில்:- மாதிரி மலகூடம், வீடு, கிணறு, துப்புரவான வளவு.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஞு ஆடிமீ ௫உ திங்கட்கிழமை

ஆவசியகம் செய்யவேண்டியவை

இலங்கை இராணுவத்திற் சேவிக்கும் சைவமதத்தவருள் தாவர போசனிகளாயுள்ளார்க்கு, அங்ஙனந் தாவர போசனத்திற்காகிய வசதிகளையும் அவர்கள் வழிபாடு செய்தற்காகிய ஆலயத்தையும் அதிகாரிகள் ஆவசியகம் ஏற்பாடு செய்தல்வேண்டுமென்ற முறையீடு இலங்கையிலுள்ள சைவமக்கள் பலர் மூலமாக இங்குத் தெரிவிக்கப்படலாயிற்று. இப்படியே இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கைச் சர்வகலாசாலையிற்பயில்வோருள் தாவர போசனிகளாயுள்ள மாணுக்கருக்குத் தாவர போசனம் வழங்கக்கூடிய ஒழுங்குகளையுஞ் செய்தல் வேண்டுமென்று இங்குள்ளார் பலர் விரும்புதலாயினர். இவைகளை யுத்தேசித்து யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபையார் சென்றவாரங் கூட்டிய நிர்வாகசபைக் கூட்டத்தில் மேலே சொல்லப்பட்ட விஷயமாக ஒரு நிர்ணயத்தைப் பிரேரித்து ஏகசம்மதமாக நிறைவேற்றி மேலதிகாரிகட்குச் சமர்ப்பித்துள்ளனர்.

குறித்த இரு விஷயங்களுட் பின் சொல்லப்பட்டதாகிய, இலங்கைச் சர்வகலாசாலையில் தாவரபோசனத்திற்கும் ஆகிய ஒழுங்குகள் மேற்படி சர்வகலாசங்க அதிகாரிகளாற் செய்யப்படுமென இப்பொழுது அறியலானேம்; அங்ஙனமாயின் அது சாலவும் மெச்சுதற்பாலதாகும்; இல்லையேல் அப்படியான ஒழுங்கினை அதிகாரிகள் இன்னே அமைத்துவிடல் இன்றியமையாததாகும். எச்சமயத்து மாணவர்க்கும் கல்வி கற்கும் விஷயத்திலே சமயக் கொள்கைகள் ஆசாரங்களை அவ்வச்சமயமாணுக்கர் அநுட்டித்துவருதற்கு எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் பாதுகாத்தல் அதிகாரிகளின் மேற் பொறுத்த கடனாகும்.

இனி, இராணுவ விஷயத்திலே அவரவர் சாதி சமயங்களின் கொள்கைகளுக்குத் தக நடத்துவதே அக்காலந்தொட்டு இற்றைநாள் வரையுள்ள வழக்கமாகும். சிலமாசங்கட்கு முன்னர் இந்திய சைநியம் இலங்கைக்கு வந்து சேர்ந்த போது அவர்கள் தாவரபோசனிகளென்றும் கோதுமைமா "ரொட்டி" முதலியவற்றை அச்சேனுவீரர் தாமாகவே ஆக்கி உண்ணு மியல்புடையரென்றும் கொழும்புத் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தமையை இங்குள்ளார் பலர் படித்திருப்பர். ஆனதால் இலங்கையிலே தாவர போசனிகளாயுள்ளார்க்கும் பிரத்தியேகமாகத் தாவர உணவிற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை அதிகாரிகள் செய்து வைத்தல் வேண்டும். மேலும் தெய்வ வழிபாட்டு விஷயத்திலும் வெவ்வேறு சமயத்தினராகிய சைநிய வீரர்கட்கு அவ்வச்சமயத்தற்குரியவழிபாட்டிற்காகிய தாபனங்களைச்சமயோசிதமாக வேனும் அமைத்தல் ஆவசியகமாம். கொழும்பிலுள்ள நிவுச்சிவன்கோயிலும் யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள முனியப்பர் கோவிலும் அந்தக் காலத்திலே இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த இந்திய போர்வீரரின் தெய்வ வணக்கத்திற்கு வேண்டி அமைக்கப்பட்டனவென்று சரித்திரவாயிலாகவும் கன்னபரம்பரையாகவும் அறிகின்றேம்; மேலே சொல்லப்பட்ட இவ்விஷயங்களில் அதிகாரிகள் சிறிது பராமுகமாயிருப்பதக்கண்டால் இலங்கை அரசாங்கசபைச் சனப்பிரதிநிதிகளாயுள்ளவர்கள் மேற்படி சபை கூடுஞ் சமயத்தில் இப் பிரேரணைகளை எடுத்தாண்டு நிறைவேற்றி வைத்தல் வேண்டும்.

இந்திய நாட்டிற் கைத்தொழில் விருத்தி

இலங்கை மக்களாகிய நாங்கள் உண்ண உணவிற்கும் உடுக்கத் துணிக்கும் இன்னும் சீவியத்துக்கும் இன்றியமையாப் பொருள்களாயுள்ளவற்றிற்கும் திண்டாடும் இக்காலத்திலே, எங்கள் அயல் நாட்டினர்களாகிய இந்திய மக்கள் கைத்தொழில் விவசாயத் தொழில்களிற் பெரிதும் விருத்தியடைந்து வருதலும், அயிரோப்பாக் கண்டம் யுத்த பூமியாக அலலற்படும் இக்காலத்தில் அந்த அயிரோப்பாக் கண்டத்தினருக்கு இந்தியர் வேண்டிய உணவுப் பொருள்களையும் ஒரு அளவிற்கு யுத்தஉப கரணங்களையும் உதவி வருதலும் சாலவும் பாராட்டற் பாலதாகும். இரும்பு உருக்கு முதலியவற்றைக் கொண்டு செய்யப்படும் கருவிகளும், நிலக்கரியும் காகிதஞ் செய்தலும் இந்தியாவில் முன்னிருந்தமையைக் காட்டிலும் இப்பொழுது பன்மடங்கு விருத்தியடைந்து விட்டனவாம். நூல்நூற்றல் புடைவைநெசவுசெய்தல் என்னும் இத்தொழில்களும் இவற்றால் வரும் வருவாயும் இப்பொழுது அதிகரித்து விட்டனவாம். சீனி சர்க்கரை முதலியன ஆக்குதலும் சணற் செய்கையும் முந்திய வருஷங்களைக் காட்டிலும் சென்ற ஆண்டிற் சிறிது குறைந்து விட்டதாம்.

மேலும் உணவுப் பொருள் விஷயமாக ஆராயுமிடத்தில், இந்தியாவிலே அரிசி கோதுமை யென்னுமிவைகள் மாத்திரம் சிறிது விலையேறி யிருக்கின்றனவாம். ஏனைய பொருள்களெல்லாம் பழைய விலைப்படியே இந்த யுத்த காலத்திலும் பெறத்தக்கனவா யிருக்கின்றனவாம். இந்தியமக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களையெல்லாம் இப்பொழுது தாமாக ஆக்கிக் கொள்ளத் தொடங்கி விட்டபடியால், அந்நிய நாடுகளிலிருந்து அங்கே பொருள்களை இறக்குமதி செய்தல் குன்றத்தலைப்பட்டுக் கொண்டதாம். இங்ஙனமெல்லா மிருந்தாலும் இந்திய பொருள் பண்டங்கள் இந்த ஆபத்தான காலத்திலும் இலங்கையில் வேண்டிய அளவிற்கு இறக்குமதி செய்ய முடியா நிலையிலிருத்தல் இலங்கை மக்களின் துர்ப்பாக்கியமாகும். பலபுதல்வர்களைப் பெற்ற தாயைப் பார்த்து வந்தி கெட்டு பிர்த்துக் கவலைப்படுவதனுல் ஆம்பயன் யாதுமில்லையாம்.

தீக்ஷை

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

தீக்ஷை என்னும் வடமொழிச் சொல் பாசத்தைக் குறைத்து ஞானத்தைக் கொடுப்பது என்னும் பொருளைத் தருவது. இது சைவசமயிக்கு இன்றியமையாதது. சிவபெருமானை ஆகம விதிப்படி வழங்குவதற்கு யோக்கியதா பத்திரம் போன்றது. எக்காரணத்தாலோ இந்நியதி இக்காலத்தில சைவர்களால் பெரிதும் கைசோரவிடப்பட்டது. கிறிஸ்தவர்களுள் ஞானஸ்நானம் பெருதவனும் மகமதியர்களுள் சுன்னத்துச் செய்துகொள்ளாதவனும் இலை. ஆனுல், சைவர்களுள்ளே தீக்ஷை பெருதவர்கள் பலலாயிரம் பேர்களா. தீக்ஷைபெற்றும் சந்தியாவந்தனம் முதலிய சற்கருமங்களைச் செய்வோர் சிலரினுஞ் சிலரேயாவர். சைவசபைத் தலைவர்களும் சைவப்பிரசாரகர்களும் பலர் அதீக்ஷிதர்களே. சமயப்பிரவேசஞ் செய்துகொள்ளாத இத்தகையோர் தங்களைச் சைவசமயிகள் என்று சொல்லிக்கொண்டு திரிவது நகைப்பிற்கிடமாம். ஒருபொருளை நன்றெனக் கருதுகின்றவர்களுக்கு அதனைத் தேடிப்பெற்று அநுபவித்தாலன்றி அதனையுடையவர்கள் எனப்படுதலும் அதனுற் பெறப்படும் பயனும் இல்லையாம். அதுபோலவே, சைவசமயத்தை மெய்யெனக்கருதுகின்றவர்களுக்கு, சைவாசாரியரையடைந்து சமயப் பிரவேசமாகிய தீக்ஷை செய்து கொண்டு அதன் வழி நின்றாலன்றி அதனையுடையவர்களெனப்படுதலும் அதனுற பெறப்படும் பயனும் இல்லையாம்.

இத்தீக்ஷையே மேலைத்தேசத்தில பரவி அங்கே Mesmerism என்று கூறப்படுவது.

இரக்கிய வாரணம் பாசை மீனண்டஞ் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைத்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமாபோற் சிவமேயாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே

என்ற சிவஞான சித்தியர் கூறியபடி மூன்றுவித தீக்ஷையப் பெயருகிய Mesmerism நடைபெறுகின்றது. மேலைத்தேசத்தில் இவை உடலைப்பற்றிய வியாதிகளைப் போக்க உபயோகப்படுகின்றன. நமது தேசத்தில் தேசிகமூர்த்திகளால் உயிரைப்பற்றிய மலமாகிய பிணியைப் போக்க மோசிக்கப்படுகின்றன.

பரிசம் Touch சிந்தை Will பார்வை Look விசேஷ தீக்ஷை பெற்றவர்களே சிவபூசை செய்வதற்கு அருகர். பூசையிலாதான் உண்டி புழுபுலையின் கூட்டம் என்று சிவபூசையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளமையை அவதானிக்க.

பூக்கைக்கொண்டான் பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண்டானு மநவிற்கிலார்
ஆக்கைக்கே யிரைதேடி யலமந்து
காக்கைக்கே யிரை யாகிக் கழிவரே

என்னும் தேவாரத்தையுஞ் சிந்திப்போமாக.

ஆஸ்பத்திரிகட்குப் புதிய அரிசி அளவு

கைதிகள் பாதிக்கப்படும் விதம்

பொதுமக்கள் விஷயத்தில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய அரிசி விநியோக முறைகளை ஆஸ்பத்திரிகள் சிகிச்சா நிலையங்கள் சிறைச்சாலைகள் ஆகியவற்றின் விஷயத்தில் இன்று திங்கட்கிழமையிலிருந்து நடைக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது.

நோயாளிகளுக்கும் கைதிகளுக்கும் இப்பொழுது விநியோகிக்கப்பட்டு வரும் அரிசி அளவுக்குப் பதிலாகப் பொதுஜனங்களுக்கு விநியோகிக்க விருக்கும் புதிய அரிசி அளவு முறை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட விருக்கிறது. புதிய அரிசி விநியோகத் திட்டத்தின்படி, நோயாளிகளும் கைதிகளும் வயசையொட்டியும் தொழிலையொட்டியும் வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளாக விருக்கும் மூன்று வயசுக்குட்பட்ட சிறுவருக்கு வாரமொன்றுக்கு முக்காற்படி அரிசிமட்டும் அநுமதிக்கப்பட்டு வருகிறது. ஆயின், மூன்று வயசுக்கு மேற்பட்டவர்களுக்கும் 10 வயசுக்குட்பட்டவர்களுக்கும் 1½ படி அரிசி மட்டும் அநுமதிக்கப்படும்.

வயசான நோயாளிகளுக்கும் 14 வயசுக்கு மேற்பட்ட கைதிகளுக்கும், 10 வயசுக்கு மேற்பட்ட சிறுவருக்கும், பொதுமக்களுக்கு அநுமதிக்கப்பட்டிருப்பதுபோல 1½படி அரிசி விநியோகிக்கப்படும். சிறைச்சாலை ஸ்தாபனங்களிற் கடுந் தொழில் ஈடுபடுபவர்களுக்கு வாரமொன்றுக்கு $1\frac{7}{8}$ படி அரிசி அநுமதிக்கப்படும்.

ஆஸ்பத்திரிகள், சிகிச்சா நிலையங்கள், சிறைச்சாலைகள் ஆகியவற்றின் அதிகாரிகள் அரிசிக்கு விண்ணப்பிக்கும்போது புதிய வாராந்த விநியோக அளவை அநுசரித்துச் சம்பந்தப்பட்ட ஆட்களின் செயல்களைக் குறிப்பிட்டவாறு வெவ்வேறு கோஷ்டிகளாக எழுதியனுப்பும்படி ஒழுங்கு செய்யுமாறு [illegible] டைரக்டர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல் ஆகியோரை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி கேட்டிருக்கிறார்.

இப்பொழுது இந்த ஸ்தாபனங்கள் தமது அரிசியைப் பெறக் குத்தகைக்காரர் மூலம் விண்ணப்பிக்கும்போது வாரமொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 1½ படி வீதம் அரிசியளவு மதிப்பிட்டு வருகின்றன.

ஒரு நோயாளி ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்படும்போது, தமது அரிசிக்கூப்பன் புத்தகத்தை ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் சமர்ப்பித்து விடுவதுண்டு. குத்தகைக்காரர் அரிசியைப் பெறுவதற்கு இப்புத்தகங்களை உபயோகிப்பர்.

படகு "லைசென்ஸ்" பெற்றிருந்ததா?

பண்ணைப் படகு விபத்து வழக்கு

விசாரணையின்போது மிஸ்றர். பிரசாத் சாக்ஷியம்

யாழ்ப்பாணம் ஜூன் 15

பண்ணைப் படகு விபத்தை யொட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மறுபடியும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, வடமாகாணத் தலைவர் மிஸ்றர். எம். பிரசாத் சாக்ஷியங் கூறினுர். விபத்தேற்பட்ட நான்கு அல்லது ஐந்து தினங்களின் பின்னரும் படகு கடற்போக்கு வரத்துக் கேற்றதா யிருந்ததென்று மிஸ்றர். பிரசாத் அபிப்பிராயப்பட்டார். சம்பந்தப்பட்ட படகுக்கு 'லைசென்ஸ்' பெறவில்லையென்று தாமறிந்ததாகவும் மாகாணத் தலைவர் கூறினுர்.

சென்ற மேமீ 21-ந் திகதி முரட்டுத்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் நடந்து கொண்டதன் பலனுக 19 பேருக்கு மரணத்தை யுண்டு பண்ணியதாகப் பண்ணைக்கும் அல்லைப்பிட்டிக்குமிடையே போக்குவரத்துச் செய்துவந்த மோட்டார்ப் படகின் சாரதி என். குருநாதி, தண்டேல் கே. பொன்னையா ஆகியஇருவர் மீது இவ்வழக்கிற குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்விரு எதிரிகளும் செய்த குற்றத்திற்கு உடந்தையாக விருந்ததாகப் படகுப் போக்குவரத்துக் குத்தகைக்காரரான திருவாளர்கள் பி. எஸ். திருச்செல்வம், ஈ. ஜே. பொன்னையா ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

மிஸ்றர். பிரசாதைச் சாட்சியங் கூறும்படி வழக்காளி பாகம் அழைக்கவே அவர் கூறியதாவது:-

"ஒரு வாரத்திற்கோருமுறை குறித்த மோட்டார்ப் படகில் நான் பிரயாணஞ் செய்திருக்கிறேன். படகுகள் சட்டத்தின் பிரகாரம் மோட்டார்ப்படகுக்கு லைசென்ஸிருக்க வேண்டும். அதற்கு "லைசென்"ஸைப் பெறவில்லையென்று நான் அறிந்தேன்."

மேலும், எதிரிபக்க வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது மிஸ்றர். பிரசாத் தெரிவித்ததாவது:—

"குறித்த சம்பவத்திற்கு நான்கு அல்லது ஐந்து தினங்களுக்குப் பின்னர், குறித்த படகு பண்ணையிலே கடலி லிருந்து வெளியே எடுக்கப்பட்டு, பொலிஸ் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டது. படகுப் போக்குவரத்தைப் பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு நான் பண்ணை நிலையத்துக்குப் போயிருந்தேன். அப்பொழுது, யாழ்ப்பாணம் பகிரங்க வேலைப் பகுதியின் கண்காணிப்பு என்ஜினியர் மிஸ்றர். ஸி. ஈ. பிக்நத்தையும் என்னுடன் அழைத்துச் சென்றேன். படகைச் சோதனை செய்தபோது, அது கடற் போக்கு வரத்திற் கேற்றதென்றும் நல்ல நிலைமையி லிருந்ததென்றும் எனக்குத் திருப்தி யேற்பட்டது."

பின்னர் மீண்டும் விசாரிக்கப்படும்போது, படகு லைசென்ஸ் இருந்ததா அல்லது இல்லையா வென்று தாம் விசாரிக்கவில்லையென்றும், படகில் சீரடையாளம் குறிப்பிட்டிருக்க வில்லை யென்றும் மிஸ்றர். பிரசாத கூறினுர்.

மற்றுஞ் சில சாட்சிகள் சாட்சியங் கூறியபின், மேல் விசாரணை ஜூலைமீ 21-ந் திகதிவரை பின்போட்டு வைக்கப்பட்டது.

பிரெஞ்சுக்கப்பல்களைப் பிருத்தானியர் அழித்தால்?

"அதன் விளைவுகளுக்கு ஐக்கிய அமெரிக்காவே பொறுப்பாளி"

தலைவர் ரூஸ்வெல்டுக்கு லவாலின் மிரட்டல்

லண்டன் ஜுலை 16—

அமெரிக்காவின் சம்மதத்தோடு பிருத்தானியர் அலெக்ஸாண்ட்ரியாவிலுள்ள பிரெஞ்சு யுத்தக்கப்பல்களை நாசஞ் செய்வார்களேயானுல் அதனுல் ஏற்படும் எல்லா விளைவுகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்குமென்று மின்றர். லவால் ஜனுதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு அறிவித்திருக்கிறுர்.

இந்தப் பிரெஞ்சு யுத்தக்கப்பல்களைச் சத்துருவசம் விடுவதற்குப் பிருத்தானிய அரசாங்கம் ஒருபோதும் இணங்காதென்று இங்கு பலமாக வற்புறுத்தப்படுகிறது.

விச்சி செய்தியொன்று கூறுவதாவது:—

பிருத்தானியர் அலெக்ஸாண்ட்ரியாவைக் காலிசெய்ய நேரிட்டால் அங்குள்ள பிரெஞ்சு யுத்தக் கப்பல்கள் செய்யவேண்டியதைப்பற்றி அக்கப்பல்களின் தலைவர் அட்மிரல் காட்பிராயுக்கு விச்சி அரசாங்கம் ஜூன் மாதம் 28-ந் திகதியன்று உத்தரவு அனுப்பியிருப்பதாக உத்தியோக முறையில் இங்கு கூறப்படுகிறது.

துறைமுகத்தை விட்டுச் செல்ல முடியாவிட்டால், பிரெஞ்சுக் கொடிகளுடன் இக்கப்பல்கள் அங்கேயே இருக்கவேண்டுமென்று அட்மிரல் காட்பிராயுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிருத்தானியர் அலெக்ஸாண்ட்ரியாவைக் காலிசெய்தால் இக்கப்பல்கள் சமீபத்திலுள்ள பிரெஞ்சுத் துறைமுகமொன்றுக்குச் செல்ல முயற்சிக்கவேண்டும். எச்சமயத்திலும் பிருத்தானிய கடற்படையுடன் வெளியேறிச் செல்லக்கூடாது; இன்று வெளியான அறிக்கை யொன்றில் மேற்கூறிய விஷயங்கள் காணப்படுகின்றன. இக்கப்பல்களை அச்சியர் வசமாகும்படி விட்டுக் கிடக்கூடாதென்று அட்மிரல் காட்பிராயுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக இவ்வறிக்கை கூறுகிறது.

பிருத்தானியர் வெளியேறுமுன் இக்கப்பல்கள் விஷயத்தில் ஏதாவது தலையிட்டார்களென்றுல் இக்கப்பல்கள் இயன்றவரையில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமென்று மார்ஷல் பெட்டேன் அமெரிக்க ஸ்தானிகருக்குத் தெரிவித்ததாக இவ்வறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

மெர்சல் கபீரிலிருந்த பிரெஞ்சு யுத்தக்கப்பல்கள் பிருத்தானிய கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்தபொழுது பிருத்தானிய யுத்தக் கப்பல்கள் அவைகள்மீது பீரங்கிப் பிரயோகஞ் செய்தமாதிரி இத்தமுறையும் நடைபெறுமாஞல் அதனுல் ஏற்படும் விளைவுகள் மிகவும் மகத்தானதாக இருக்குமென்று இவ்வறிக்கை கூறுகிறது.

ஜெனறல் டிகால் தேசியக் கொமிற்றிக்கு ஐக்கிய அமெரிக்கா தன் சார்பில் இரண்டு இராணுவ நிபுணர்களை அனுப்பியிருப்பது சம்பந்தமாக விச்சி அரசாங்கம் செய்யும் ஆக்ஷேபனையை அமெரிக்கா புறக்கணித்து விடுமென்று நிச்சயமாகத் தெரிகிறது.

அலெக்ஸாண்ட்ரியாவிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்கள் சம்பந்தமாக விச்சி அரசாங்கம் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலுஞ் சரி மின்றர். ரூஸ்வெல்ட் இதுசம்பந்தமாகக் கடைசிவார்த்தையைக் கூறிவிட்டாரென்று சொல்லப்படுகின்றது.

எகிப்தில் 'டாங்கி' யுத்தம் நடைபெறுகிறது

பாலைவன நிலைமை முழுவதையும் பாதிக்கும் மிகப் பிரதானமான போராட்டம்

நேசதேசப் படைகள் 7 மைல்தூரம் முன்னேறின

கெய்ரோ ஜுலை 17—

அரங்கத்தின் மத்திய பகுதியில் வியாழக்கிழமை முழுவதும் ஒரு பெரிய 'டாங்கி' யுத்தம் நடைபெற்றது.

வடபகுதியில் இரவு மங்குமாக நாள் முழுவதும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேசதேசப்படைகள் நேற்றுக்காலை திடீரத் தாக்குதல் நடத்தி டெல் எல் எய்ஸாவில் சத்துருவிட மிருந்த வரம்பைத் திருப்பக் கைப்பற்றின.

பின்னர்க் கிடைத்த செய்தியொன்றில சத்துருபடைகள பதில் தாக்குதல் நடத்தி நேசதேசப் படைகளை டெல் எல் எய்ஸாவிலிருந்து துரத்தி விட்டனவென்று சொல்லப்படுகிறது. ஆயின், நேசதேச அரண் இப்பொழுது மீண்டும் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்குமாம்.

நாள் முழுவதும் எல் அலாமீனுக்குத் தெற்கில் மத்திய பகுதியில் நடைபெற்ற பெரிய 'டாங்கி' யுத்தத்தின் விளைவு மேற்குப் பாலைவன நிலைமை முழுவதையும் பாதிக்குமென்று கெய்ரோவிற் கருதப்படுகிறது.

மத்திய பகுதியில் தாக்குதல் நடத்திய எட்டாவது சேனை புதன்கிழமை மாலை நேரத்திற்கிடையில் சத்துரு அரண்களுக்குள் ஏறக்குறைய ஏழுமைல் தூரம்வரை முன்னேறிவிட்டது.

பிரமாதமான முறையில் தாக்குதல்

எல் அலாமீனுக்குத் தெற்கிலுள்ள வரம்பில் எட்டாவது சேனை புதிதாகக் கைப்பற்றியிருக்கும் அரண்களமீது ரோமல் புதன்கிழமை மாலை ஆறுமணிக்குப்பிரமாண்டமான முறையில் இரண்டாவது எதிர்த்தாக்குதல் ஒன்றை நடத்தினுர். அவர் 'டாங்கி'களையும் காலாட் படையையும் பீரங்கியையும் ஏவித் தாக்கினுர்.

பிருத்தானிய கவசப்படைகள் முன்னணியைப் பாதுகாத்துப் போர் செய்யும் நேசதேசத் துருப்புகளின் உதவிக்குச் சென்றன.

முதலாவது பதில் தாக்குதல் பிரமாண்டமான முறையில் நடைபெறவில்லை. அச்சு நேசப்படைகள் இரவில் நடத்திய தாக்குதலின் விளைவாக எல் அலாமீனுக்குத் தெற்கில் நேசதேசப்படைகள் முன்னேறித் தாக்கிக்கொண்டிருக்கும் இடத்தின் முனையில் ரோமல் தம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள முடிந்தது. டெல் எல் எய்ஸா புகையிரத நிலையத்தைப் பிடிப்பதற்கு உக்கிரமான யுத்தம் நடைபெற்றது. இந்த நிலயத்தை அச்சுநாட்டினர் கைப்பற்றி பின் விரைவிற் பறிகொடுத்தனர்.

எல் அலாமீனுக்குத் தெற்கில் புதன்கிழமை இரவு கவசப்படைகளின் யுத்தம் நடைபெற்றது. எல் அலாமீனில் ரோமெல் தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர் இப்பொழுதுதான் முதற்றடவையாக 'டாங்கி' யுத்தத்தில் இருதரப்பினரும் தமது கவசப்படைகளை ஏவிவிட்டிருக்கின்றனர்.

ரோமலின் திட்டங்கள் கவிழ்க்கப்பட்டன

ஆக்கின்லெக் தக்க சமயத்தில் சாமர்த்தியமாக முன்னேறித்தாக்கி ரோமலின் திட்டங்களை மீண்டும் கவிழ்த்து விட்டனர். ஜெர்மன்டாங்கிகள் காலாட்படை, இத்தாலியத் துருப்புகள் ஆகியவற்றின் ஒத்தாசையோடு வடக்கில் 'டேகபஸ்' பின் அடிவாரத்திலுள்ள மணற்குன்றுகளுக்கிடையே யிருந்த ஆஸ்திரேலியர்களைத் தாக்கவும் நேசதேசத்துருப்புகள் மத்திய பகுதியில் ஓர் உக்கிரமான பதில் தாக்குதலை நடத்தின. இந்த நடவடிக்கையினுல், எல் அலாமீனுக்கு மேற்கில் கரையோரமாக முன்னேறியிருக்கும் எட்டாவது சேனைமீது ரோமெல் தாக்குதல் நடத்தமுடியாமற் போயிற்று.

யுத்தகளம் முழுவதிலும் ஆதிக்கஞ் செலுத்தும் ஒரு பிரதான மத்திய வரம்பின்மீது இன்று அதிகாலையில் எமது துருப்புகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தன. மாலையில் வரம்பு முழுவதும் எமது துருப்புகளாற் கைப்பற்றப்பட்டு விட்டது. எமது துருப்புகள் டாங்கிகளின் உதவியோடு இன்னும் முன்னேறிச் செல்கின்றன. எமது துருப்புகள் ஏறக்குறைய 7 மைல் தூரம் சத்துரு அரண்களுக்குள் முன்னேறியிருக்கின்றன.

நான் நேற்றிரவு இச்செய்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது பீரங்கிகள் முழங்குஞ் சப்தம் கேட்டது. பிரகாசிப்பிக்கப்படும் போது எரியும் வெளிச்சத்தையும் நான் கண்டேன். பெரிய பீரங்கிகள் சத்துரு அரண்களுக்குள் குண்டுகளைச் செலுத்திக்கொண்டிருந்தன. இடையிடையே பிருத்தானிய சத்துருப்பிரதேச வெடிகுண்டுவிமானங்கள் ஆகாயத்தில் பறக்குஞ் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து எமது விமானப்படையோடு ஒத்துழைக்கும் பெரிய வெடிகுண்டுகள் வெடித்த சத்தம் கேட்டது.

நேற்றுப் பட்டப்பகலில் ஐக்கிய அமெரிக்க இராணுவ விமானங்கள் பெங்காஸியைப் பலமாகத் தாக்கின. கப்பற்றுறை ஸ்தாபனங்களிற் தீ மூட்டப்பட்டது.

நேசதேச யுத்த விமானங்கள் ஏழு சத்துரு விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. நேசதேச விமானங்களில் ஒன்று மாத்திரம் நஷ்டமாயிற்று.

ஜெர்மானியர் கூற்று

எல் அலமீனுக்குச் சமீபமுள்ள சில மலைகள் புதன்கிழமையன்று பலத்த சண்டையின் பின்னர்க் கைப்பற்றப்பட்டனவென்றும் அவுஸ்திரேலியப் பட்டாளத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கைதிகளாக்கப்பட்டனரென்றும் யுத்தம் இன்னும் நடைபெறுகிறதென்றும் உத்தியோகப்பற்றற்ற ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் கூறுகின்றது.

பெயர் மாற்றம்

கோண்டாவில் வடக்கு. சரவணை நாதன் என இதுகாறும் வழங்கி வந்த எனது பெயரை இன்று தொடக்கம் சரவணை நடராசன் என மாற்றிக் கொண்டேனென்றும்; இனிமேல் சரவணை நடராசன் என்றே எச்சாதனத்திற்கும் கையொப்பம் இடுவேனென்றும் இத்தால் யாவருக்கும் தெரிவிக்கிறேன்.

ச. நடராசன்

கோண்டாவில் வடக்கு.
15. 7. 42.
Mis. 80 16, 20, 23. 7- 42.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனிமீ 28ந் தேதி (12-7-42) ஞாயிற்றுக்கிழமை மேற்படி சபை நிலையத்திற் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்திற் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் இராணுவக்கடமை யாற்றும் சைவ மதத்தைச் சேர்ந்த வீரர்கள் விரும்பியபடி கடவுள் ஆராதனை செய்யும் வசதிகளையும், அவர்களுள் விரும்பியவர்கள் தாவர போசனமுண்ணக்கூடியவசதிகளையும் செய்துவைக்க வேண்டுமெனவும், இலங்கைச் சர்வகலாசாலை விடுதிச்சாலையில் தங்கும் மாணவர்களுள் விரும்பியவர்களுக்குத் தாவர போசனங் கிடைக்கக் கூடிய ஒழுங்கை மேற்படி கழகத்தில் செய்துவைக்க வேண்டுமெனவும் இச்சபை அரசாங்கத்தாரை விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை

நிகழும் சித்திரபானு வருஷம் ஆடி மீ 6ந் தேதி (21-7-42) செவ்வாய்க்கிழமை சபை நிலையத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை நடத்தப்பெறும். முற்பகல் 9 மணிதொடக்கம் 2மணிவரை சிவபூசையும் மாகேசுர பூசையும் மாலை 5 மணிதொடக்கம் பெரியபுராணத்திலுள்ள வெள்ளானைச் சருக்கம் படித்துப் பயன்சொல்லுதலும் நடைபெற மேற்படி சபையார் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

காந்திஜி திட்டம்பற்றிக் காரிய நிர்வாகசபையில் விவாதம்

கருத்து வேறுபாடு குறைந்து வருகிறது

அகில இந்தியக் கமிட்டிக் கூட்டம் பம்பாயிலா? அன்றி டில்லியிலா?

வார்தா ஜூலை 12—

காந்திஜீயின் நகல் திட்டத்தைப் பற்றி இன்று காரியக் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கொண்டு விவாதம் நடைபெற்றது. அந்தத் தீர்மானம் சம்பந்தமாக எழுப்பப்பட்ட சில ஆக்ஷேபனைகளைப் பற்றியும் தீர்க்கமாக ஆலோசனை நடந்தது. பத்திரிகை நிருபர்கள் மௌலானா அபுல்கலாம் ஆஸாதைக் கண்டு பேசியபோது அவர் இன்னமும் பொதுவாகவே விவாதம் நடந்து வருவதாகவும் செவ்வாய்க்கிழமை மாலை கூட்டம் முடியலாம் எனத் தாம் நம்புவதாகவும் கூறினர்.

நாளை மகாத்மாவின் மவுன விரதநாள். ஆகவே அவர்நாளை (திங்கட்கிழமை) கூட்டத்துக்கு வரமாட்டார். பண்டித ஜவஹர் மௌலானா ஆஸாத் ராஜன் பாபு ஆகிய மூவரும் நாளைப்பகல்சேவாக்கிராமத்தில் மகாத்மாவைச் சந்திப்பார்களெனத் தெரிகிறது. இதுவரை வெளியிடப்பட்ட கருத்துகளை அநுசரித்து காந்திஜீயின் நகல் தீர்மானம் திருத்தப்படுமெனத் தெரிகிறது.

காங்கிரஸ் திட்டத்தில் புதிய அம்சம்

காங்கிரஸ் திட்டத்தில் இப்போது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள அம்சம் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கம் உடனே பூரணமாக மறையவேண்டு மென்பது தான். இந்தப் புதிய அம்சத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் அங்கீகாரத்துக்கு அனுப்ப வேண்டியது அவசியம். எவ்விதம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை மறையும்படிச் செய்வது என்ற விஷயமாகக் கமிட்டியில் சிலகருத்து வேறுபாடுகளிருந்ததாகச் சொல்லப்பட்டது. அந்த வேறுபாடுகளும் இப்போது குறைந்து விட்டன.

அகில இந்திய நிர்வாகசபை

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை எப்படியும் கூட்டியே ஆகவேண்டுமென்ற முடிவு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது இனி அக்கூட்டத்தை டில்லியில் நடத்துவதா? அன்றி பம்பாயில் நடத்துவதா என்ற விஷயமாகத் தான் இப்போது ஆலோசனை நடந்துவருகிறது. அநேகமாக பம்பாயில்தான் இக்கூட்டத்தைக்கூட்ட முடிவுசெய்வார்கள் என்றும் தெரிகிறது. காரியக்கமிட்டி சிபார்சை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தீர்க்கமாகப் பரிசிலனை செய்து ஒரு முடிவு கூறுமுன் காந்திஜீயின் பிரேரணையின்படி எந்த இயக்கமும் ஆரம்பிக்காது. காந்திஜீயின் திட்டத்தால் நேரிடக்கூடிய சாதக பாதகங்களைத் தலைவர்கள் அதிகமாக ஆராய்ந்து பார்த்து வருவதால்தான் சேவாக் கிராமத்திலும் வார்தாவிலும் இத்தனைநாள் விவாதம் நீடிக்கிறது. பொதுவாக உலகத்திலும் குறிப்பாக இந்தியாவிலும் இதுவரை ஏற்படாத ஒருநெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில் மகாத்மா வெளியிட்டுள்ள தீவிரமான ஒரு திட்டத்தைப்பற்றி தீர்க்கமாகவே ஆலோசனை நடத்தி வருகிறது. காந்திஜீயின் திட்டத்தில் அடங்கிய முக்கிய தத்துவத்தைத் தலைவர்களில் எவரும் ஆக்ஷேபிக்கவில்லை. சர்வதேச நிலையையும் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்குவரவேண்டு மென்பதற்காகவே தலைவர்கள் இத்தனைநாளாகயோசித்து வருகின்றனர். அந்தத் திட்டத்தை ஏற்றுநடத்துவதால்நாட்டுக்குஏற்படக்கூடிய பலாபலன்கள் என்னவென்றும், காங்கிரஸுக்கு ஏற்படும் பொறுப்பு என்னவென்றும் கவனிக்கவேண்டியதும் அவசியமாகவிருக்கிறது.

காந்திஜீயின் நகல் திட்டம் பத்திரிகைகளில் வெளியிடப்படும் எனினும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஒருமுடிவு கூறுமுன்னர், அந்தத்திட்டம் அமுலுக்கு வராது.

எல்லைப்புற நிலைமை

காங்கிரஸ் காரியக் கமிட்டி எல்லைப்புற நிலைமையைப்பற்றி இன்று விவாதித்தது. கான் அப்துல் கப்பார்கான் எல்லைப்புறத்தில் அதிகாரிகள் காங்கிரஸ்காரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வருவதைப்பற்றி எடுத்துச்சொன்னார்.

ஜனுப் அஸப் அலியின் அசௌக்கியம்

ஜனுப் அஸப்அலி தேக அசௌக்கியம் அடைந்துவிட்டதால் அவர் டில்லிக்குப் புறப்பட்டு விட்டார். அவரை யுனைட்டட் பிரஸ் நிருபர் கண்டு பேசியபோது அவர் கூறியதாவது:—

இப்போது ஏற்பட்டுள்ள நிலைமிக்க சிக்கலாகவிருக்கிறது. அதோடு நெருக்கடியாகவு மிருக்கிறது. அதிலொன்றும் ஆக்ஷேபமுமில்லை. இந்த சந்தர்ப்பத்தில் நான் அதிகமாகவொன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் முன்னதாகவே அதன் பலாபலனைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை நடைபெறுமென்பது மட்டும் நிச்சயம்.

கர்னல் அமெரிக்கு ராஜன்பாபு பதில்

வார்தா ஜூலை 12—

கர்னல் அமெரி 'இந்தியா சம்பந்தமாக வெளியிட்டுள்ள ஒரு புத்தகத்துக்கு அவரே ஒரு முகவுரையும் எழுதியிருக்கிறார். அதைப் படித்ததும் இங்குள்ள தலைவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது. இந்தச்சமயத்தில் இந்தியாவுக்குப் பாதகமான இந்த விஷயத்தை இங்கு அனுப்பியதே தவறு என இங்குள்ளவர்கள் கருதுகிறார்கள். இந்த புத்தகத்தை அரசாங்கத்தார் தங்கள் செலவில் இந்தியாவில் பரவவிடக் கூடாதென்று நினைக்கிறார்கள். ராஜன்பாபு இது சம்பந்தமாகத் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மிக்க மிதவாதியான டாக்டர் சாப்ரூவும் விரும்பாத ஒரு அமெரி இந்தியா விஷயங்களில் ஆதிக்கம் வகிப்பதென்றால் அது தகாத காரியமேயாகும். எவ்வளவுதான் மறைத்து அழகாகப் பேசினாலும் இந்தியர் தங்கள்நாட்டுக் காரியங்களைத் தாங்களே நடத்திக்கொள்ள அதிகாரமற்றிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. ஆர்ப்பாட்டமாகவும் இனிமையாகவும் வார்த்தைகளைக் கொட்டி அளந்துகொண்டு பிரித்தாலும் கொள்கையை அநுஷ்டியாது வருவதால் பயனில்லை. இதனால் சுயேச்சை கிட்டிவிட்டதாக இந்தியர் எண்ணமாட்டார்கள். ஒரு பிரச்னையைக் கிளப்பிவிட்டு அதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை பிறர்தலையில் சுமத்துவது மிகச்சுலபம். அவர்கள் தீர்த்து வைக்காவிட்டால் அவர்கள்மீது குற்றத்தைச் சுமத்தி விடுவது அதனினுஞ் சுலபம். இதனால் அந்தப் பிரச்னை இன்னும் கடுமையாகி விடுகிறதேயொழிய அதற்குப் பரிகாரம் ஏற்படுவதில்லை.

வகுப்புப் பிரச்னையைக் கொண்டு கர்னல் அமெரி இந்தக்காரியத்தைத்தான் செய்து வருகிறார். அதிகாரத்தை விட்டுக்கொடுக்காததற்கு அதை ஒரு காரணமாகவும் சொல்லி வருகிறார். ஆனால் அவரது நடவடிக்கைகளைக்கண்டு ஒருவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை அவர் செய்துவரும் பல காரியங்களுக்குப் பொருத்தமாகவே இதையும் செய்திருக்கிறார்.

போராட்டத்திலிறங்கக் காந்திஜீயின் துடிப்பு

தகவல் அறிந்து தலைவர்களின் கவலை

வார்தா ஜூலை 13

காந்திஜீதயாரித்தநகல் தீர்மானம் சம்பந்தமாகக் காரியக் கமிட்டியின் இன்றைய கூட்டத்தில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. மௌலானா ஆஸாத், பண்டித நேரு சர்தார் படேல் ஸ்ரீ கிருபலானி ஆகியவர்கள் இன்று சேவாக்கிராமத்துக்குச் சென்று காந்திஜீயோடு கலந்து பேசினார்கள். காந்திஜீ மவுன விரதத்தை முடித்த பிறகு இவர்களுடன் ஒரு மணி நேரம் சம்பாஷித்தார். அதன்பின் தலைவர்கள் வார்தாவுக்குத் திரும்பினார்கள். உடனே காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டம் அரைமணிநேரம் நடந்தது. காந்திஜி தமது திட்டத்தை மௌலானா ஆஸாத் முதலியவர்களிடம் வெளியிட்டுச் சொன்னதாகத் தெரிகிறது. அவர் இப்போதுள்ள இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தைச் சகித்திருக்க முடியாதென்றும் இது பெரும் வேதனையாக விருப்பதாகவும் தாமே இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கருதுவதாகத் தெரிகிறது. அவர் தமது திட்டத்தை ஏற்று நடக்க விருப்பமிருந்தால் காரியக் கமிட்டி அதை அங்கீகரிக்கட்டுமென்றும், இல்லையானால் இஷ்டப்படி நடக்கலாம் என்றும் சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. காந்திஜியின் இந்த முடிவு இன்றையகூட்டத்தில் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது; கூட்டத்தைவிட்டு வெளியே வந்த தலைவர்களைப் பார்த்தபோது அவர்களின் முகத்தில் கவலைக்குறி காணப்பட்டது.

சமீபத்தில் முக்கியமான சில சம்பவங்கள் நடக்கக் கூடுமெனத் தெரிகிறது.

"அராஜகமும் இரத்தக் களரியும்"

லண்டன் ஜூலை 17

இந்தியா விஷயமாக "மான்செஸ்டர் கார்டியன்" ஒரு தலையங்கம் எழுதும்போது கூறுவதாவது:—

இன்னுஞ் சில வருடங்களிற் கிடைக்கக்கூடிய!! சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் புரட்சி செய்யப் போவதாகக் காங்கிரஸ் பயமுறுத்துகிறது. இம்மாதிரியான புரட்சியில் எவ்வளவோ ஆபத்துக்கள் இருக்கின்றனவென்பதை உணர்ந்திருப்பதாகக் காங்கிரஸ் தனது தீர்மானத்திற் கூறுகிறது.

இந்தியப்பிரதிநிதிகளைக்கொண்ட இந்திய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்திப் போதுவாக வைஸ்ராய் அதன் ஆலோசனையின்படியே நடப்பாரென்று அறிவிப்பதே இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சரியான வழியாகும். கிரிப்ஸ் பேச்சுவார்த்தைகளிலிருந்து இம்முறையே வெற்றியைக் கொடுக்கக்கூடியதென்று தெரிய வந்தது. முன்பு மாகாண அரசாங்கங்கள் விஷயமாக இவ்வழியே கையாளப்பட்டது. தங்கள் தேசத்தைத் தாங்களே ஆளவேண்டுமென்ற இந்தியர்கள் விருப்பதை ஆங்கிலேயர்கள் மிக்க அநுதாபத்தோடு நோக்க வேண்டும். இரண்டு பிரதான உண்மைகளைக் கவனிக்கும்படி இந்தியர்கள் கேட்டுக் கொள்ளப்படவேண்டும். அவர்களுக்கிடையே இருக்கும் வேற்றுமையே அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்காமல் தடைசெய்கிறது. அவர்கள்விரும்பினால் இப்பொழுதுகூடக் கிரிப்ஸ் திட்டத்தின்படி இந்திய அரசாங்கத்தை நடத்த முடியும். இந்தியாவிலுள்ள கட்சிகள் அனைத்தும் இப்பரிகாரத்தைக் கையாள முயற்சிக்க வேண்டும்.

நியூயோர்க் டைம்ஸ் காந்திஜீயின் யோசனையைப் பற்றிக் கூறும்போது "இதனால் இரத்தக் களரியும் அராஜகமும் ஏற்பட்டு ஜப்பானியப் படையெடுப்பும் ஏற்படும்" என்று எழுதியிருக்கிறது.

"ஹெரால்ட் ட்ரிபியூன்' என்ற பத்திரிகை எழுதுவதாவது:—

மிஸ்டர் காந்தி, நேரு கட்சியினருக்குச் சுதந்திரம் கொடுப்பதைச் சுதேச மன்னர்கள், முஸ்லிம்கள் முதலிய சிறுபான்மைக் கட்சிகள் விரும்பாதென்பதை அவர்களே நன்கறிவார்கள். காங்கிரஸ் நாட்டின் ஏதேச்சையாக அதிகாரம் செலுத்துவதற்குப் பிரிட்டிஷாரின் உதவி வேண்டியிருக்கும்.

விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 153'0-ம் இலக்க வழக்கில் நீதிபதியுடைய கட்டளைப்படி தொல்புரம் மானுமுதலியார் மடதர்மத்தை நடாத்துவதற்குப் பஞ்சகர்த்தாக்களை தெரிவதற்குத் தகுதியுடையவர்களின் அட்டவணையைத் தயாரிக்க வேண்டியிருப்பதால் பின்னும் குறிக்கப்படும் யோக்கியதையுடையவர்கள் இந்த மாதம் 3-ம் திகதி முற்பகல் 10 மணிக்கு நேர்முகமாகத் தொல்புரம்மானுமுதலியார் மடத்திற்கு வந்து தத்தம் உரித்தைப் போதிய சான்றுடன் அத்தாட்சிப்படுத்துமாறு கேட்கப்படுகின்றனர்.

வாக்குரிமை யுடையோரின் யோக்கியதைகளாவன:-

தொல்புரம் சிதம்பரம் அம்பலவாணசுவாமி மானுமுதலியார் மடதர்மத்திற்கு 1. நிலங்களைத் தருமசாதனஞ் செய்த நன்கொடையாளர்களின் மரபினுள்ளோரும், 2. சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் இப்பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தச் சிரத்தை யெடுத்தவர்களும் 3. அவர்கள் மரபினிலுதித்து தற்போது அதை நடாத்துகிறவர்களும் 4. இவ்வியாச்சியம் தொடர்வதற்கு முந்திய பத்து வருஷங்களுக்குள் இத்தரும பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்துவதற்குப் பண உதவி கொடுத்தவர்களும் தத்தம் வாக்குரிமை கொடுக்க உரித்துள்ளவராவார்கள்.

R. N. SINNAYAH
கொம்மிஷனர் வலிகாமம் மேற்கு
மணியகாரன்

ஆனைக்கோட்டை 17. 7. 42.
Mis. 84 20. 7. 42.

பொதுநிலைத் தமிழ்க்கழகம்

இப்பெயரிய கழகம் ஒன்று பரமேஸ்வரக் கல்லூரியில் 11. 7. 42. சனிக்கிழமை பிற்பகல் கூடியது. இக்கழகமுதற் கூட்டத்துக்கு தலைமை வகிக்கவிருந்த ஸ்ரீமான். சு. நடேசபிள்ளையவர்கள் M. S. C.; அவசிய காரணமாகச் சென்னைக்குச் சென்றனராக அவ்வமயம் இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீமான் V. செல்வநாயகம் B. A. (Lond) M. A. Annamalai அவர்கள் தலைமை வகித்தனர்.

ஸ்ரீமான் V. செல்வநாயகம் அவர்கள் தமிழ்நாடு வேண்டி நிற்பனவற்றை முன்னுரையாகக் கூறி முடித்த பின்னர், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைப் பேராசிரியர் பண்டிதர் சி. சேதுகாவலர் "கழகநோக்கம்" என்பதை விளக்கும்போது இக்கழகம் நிறுவப்பட வேண்டிய காரணம் தமிழ் மக்களிடையே தமிழில் ஆர்வந்தரவல்ல கழகம் ஒன்று நல்ல திறம்பட்ட முறையில் இல்லாதிருப்பதனால் அத்தகைய தொன்று அவசியம் வேண்டும் எனவும், முத்தமிழையும் 'தமிழ்' என்பதில் அடக்கிக் கழகத்தின் நோக்கத்தில் இம்முத்தமிழின் வளர்ச்சியும் ஒருங்கு கருதப்பட்டிருக்கிறதெனவுங் கூறினர். மேலுமவர், தமிழ் ஆசிரியர்களாகத் தமிழ்ப் பண்டிதர்களாகத் தமிழ் அபிமானிகளாகத் தமிழுக்கு உழைப்பவராக, உள்ளார் பலரும் இதிற் சேர்ந்துஉழைக்குமாறு வேண்டுவதாகவும் கழகத்தின் நோக்கமாவது கூறுங்கால், தமிழை வளர்த்த லென்றும், அதை யெவ்வாறு வளர்ப்பதென்பதைப் பற்றிப் பலவேறு அங்கத்தினரும் தங்கருத்தை வெளிப்படுத்துவாராயின் அவற்றை யட்டவணைப்படுத்திக் கூடுமானவற்றை நிறைவேற்ற முயற்சிக்கலா மெனவும் கருதுவதாகக் குறிப்பிட்டார். இக்கழகம் இயல் இசை நாடகம் எனும் முப்பகுதியிலும் வளர்ச்சி பெற வேண்டியனவற்றைச் செய்வது பொது நோக்கமாயினும், இசைக்கும் நாடகத்திற்கும் ஆதாரமாகின்றும், அவற்றிற்கு உபகாரப்பட்டும் நிற்பதால் இயற்றமிழ் வளர்ச்சியே முக்கியமானதாய் முதற்கண் வைத்து எண்ணப்படும் எனவும், நோக்கத்தை அடையச் செய்யும் வழிவகைகளை யாராயவும் கழக விதிகளையமைக்கவும் ஒரு விசேஷ சபையொன்று இதிற் தெரியப்பட வேண்டும் எனவும், பொதுநிலைக் கழகம் அகில இலங்கையின் கண்ணுள்ள தமிழார்வமுள்ள பண்டிதர்களாக, அறிவாளிகளாகப் பலவேறு சங்கங்களிலிருந்தும் மதஸ்தாபனங்களில் இருந்தும் தெரியப்பட்ட உறுப்பினராக இருத்தல் மிக விரும்பத்தக்க தொன்றெனவும் கூறி முடித்தனர். இதன் பின்னராகச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அதன் பின்னர் முறையே பண்டிதர் V. இராமசாமி சர்மா வித்துவான் கா. கார்த்திகேய பிள்ளை ஆசிரியர் வே. சங்கரப்பிள்ளை, பண்டிதர். மு. நவரத்தினம் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் திரு. V. K. P. நாதன் பண்டிதர் சோ. தியாகராசா, ஆசிரியர் P. M ஞானப்பிரகாசம் முதலியோர் குறிப்புரையாகத் தமிழை வளர்க்கும் வழிவகைகள் பலவற்றையும் குறிப்பிட்டனர்.

இதன் பின்னர்க் கழக உத்தியோகஸ்தர் தெரிவும் நிர்வாகசபை அங்கத்தவர் தெரிவும் நடைபெற்றன. இத்தெரிவு முடிந்தவுடன் விதிகளை யாராய்ந்து அமைக்கவும், நோக்கத்தை அடையும் வழிவகைகளை ஒழுங்காக வரைந்து அமைக்கவுமாக ஒரு விசேஷசபையொன்று முழுச்சபையில் இருந்தும் தெரியப்பட்டது. அவற்றையிதன் முடிவிற் கீழே தருகின்றோம்.

தெரிவு முடிந்ததும் திரு. க. தம்பி சபையோர்க்கும் தலைவர்க்கும் முயற்சியாளர்க்கும் நன்றி கூறியதும் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் இனிது முடிவுற்றது.

பொதுநிலைத் தமிழ்க் கழக அமைப்பு

தலைவர்

ஸ்ரீமான், S. நடேசபிள்ளை B. A; B. L; M. S. C., F. R. E. S.

உபதலைவர்கள்

1. வண. சுவாமி, L. A. சிங்கராயர் B. A; Dip. Ed. O. M. I. (அதிபர் கொழும்புத்துறைப் போதனா கழகம்)
2. வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் வறுத்தலை விளான்.
3. நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர்.
4. பண்டிதர். V. இராமசாமி சர்மா மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.
5. பண்டிதர். ம. வே. திருஞான சம்பந்தர். இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.

நிர்வாக சபைத் தலைவர்

திரு. V. செல்வநாயகம் B. A. Lond M. A. (Annamalai) பல்கலைக் கழகப் பேராசிரியர்.

செயலாளன்

பண்டிதர். S சேதுகாவலர் கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரிப் பேராசிரியர்.

உதவிச் செயலாளர்

திரு. K. V. P. நாதன் கொழும்புத்துறை.

தனாதிகாரி

திரு. V. A. யோண்பிள்ளை இளவாலை கன்னியர் மடபோதனா கழக அதிபர்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்

பண்டிதர். கா. பொ. இரத்தினம் பேராசிரியர் அரசினர் ஆசிரியகலாசாலை கோப்பாய், பண்டிதர். சோ பாலசுப்பிரமணியம் பேராசிரியர் அரசினர் ஆசிரிய கலாசாலை கோப்பாய், வித்துவான். கா. கார்த்திகேயன் பேராசிரியர் பரமேஸ்வர பண்டித போதனா கழகம், பண்டிதர். சி. கணபதிப்பிள்ளை பேராசிரியர் சைவாசிரிய கலாசாலை; பண்டிதர். த. சிவபாதகியநாதன் கந்தர்மடம் சைவவித்தியாசாலை, பண்டிதர். மு. நவரத்தினம் உடுப்பிட்டி அரசினர் பாடசாலை, பண்டிதர். வ. நடராசா மெய்கண்டான் பாடசாலை இளவாலை, பண்டிதர். S. குலசேகரம் தம்பலைச் சைவ வித்தியாசாலை, சங்கீத பூஷணம் கே, சந்திரசேகரம் வேலணையூர் Kayts, திரு. க. இ. தம்பி B. A Proctor தெல்லிப்பழை, திரு. ச. அடைக்கலமுத்து சென்சாள்ஸ் பாடசாலை(Jaffna). செல்வி, G முருகேசு C. M. S. Girls College சுண்டிக்குளி, செல்வி. K. [illegible] மங்கையர்க்கரசி வித்தியாசாலை.

விசேஷசபை

பண்டிதர். ம. வே. திருஞானசம்பந்தர் (தலைவர்) பண்டிதர். சி. சேதுகாவலர் (காரியதரிசி), திரு. K. V. P. நாதன் வித்துவான் கா. கார்த்திகேயபிள்ளை, திரு. S. அடைக்கலமுத்து.

ஆப்கானிஸ்தானத்தில் அகவிலை விற்பனையாளர்

காதுகளைக் கடைக்கதவுடன் வைத்து ஆணி அடிக்க உத்தரவு

புதுடில்லி ஜூலை 17

ஆப்கானிஸ்தானத்தில் அகவிலைச் சாமான்கள் விற்பவர்களுக்குப் பெருங்கஷ்டம் மேற்பட்டிருக்கிறது உதாரணமாக, வாடிக்கைக்காரருக்கு அதிக விலைக்கு விற்றதாகச் சந்தேகிக்கப்பட்ட பல கசாப்புக் கடைக்காரர்களின் காதுகளை அவர்களின் கடைக் கதவுகளுடன் சேர்த்து இரண்டுமணிநேரத்துக்கு ஆணி அடித்து வைக்கும்படி அங்குள்ள நகரசபைத் தலைவர் உத்தரவிட்டிருக்கிறாரென்று கந்தஹாரிலிருந்து இங்குக்கிடைத்த அறிக்கையொன்று கூறுகிறது.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)

(† இசைத்தட்டு)

செவ்வாய் ஜூலை 21

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 இரு வயலின்கள் 7-40 சித்திர கீதம் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 திரைகானம் † 8-20 திண்டுக்கல் ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சினிமா பாட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. பி. ராமகிருஷ்ணன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திண்டுக்கல் ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 நௌகா சரித்திர கீர்த்தனைகள் வானொலி வாத்ய கோஷ்டி 7-15 நாடகம் யுத்தமுன் 7-30 அறிவிப்புகள் 7-45 மதராஸிலுள்ளபடி 8-15 டி. என். ராஜரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 9-00 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு,

புதன் ஜூலை 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7–30 வானொலி வாத்ய கோஷ்டி 7-40 திரைகானம் † 8–00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 டாக்கி மெட்டுகள் † 8-20 கே. என். செல்லப்பா பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படத்திலிருந்து † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கே. என். செல்லப்பா வாய்ப்பாடல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை வயலின் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில்செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6–45 பந்தணை நல்லூர் ராஜாயி பாட்டு 7-15 செய்தி நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-45 விஞ்ஞானமும் பாதுகாப்பும் ஆங்கிலப்பேச்சு 8-00 திருவாளப்புத்தூர் கிருஷ்ண மூர்த்திப் பிள்ளை வயலின் 8-30 அமெரிக்க வாக்கு 8-45 பந்தணை நல்லூர் ராஜாயி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வியாழன் ஜூலை 23

காலை 7-15 செய்திச் சித்திரம் 7-20 தமிழில் செய்திகள் 7-40 திரைகானம் 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 மணிமேகலை † 8-20 சிரூர் என். ஜயலக்ஷ்மி புல்லாங்குழல் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சினிமா கீதங்கள் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 சிரூர் எஸ். ஜயலக்ஷ்மி புல்லாங்குழல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 விளாத்தி குளம் நல்லப்பசாமி பாண்டியன் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில்செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35தமிழில் செய்திகள் 6-45 விளாத்தி குளம் நல்லப்பசாமி பாண்டியன் பாட்டு 7-15 செய்திக் கடிதம் 7-30 அறிவிப்புகள் 7-45 மஹாராஜபுரம் விசுவநாதையர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

தற்போதைக்கு தீவிர நடவடிக்கையில்லை

இறுதி முடிவு அ. இ. கா. கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது

'பிரிட்டிஷ் அதிகாரம் மறைய வேண்டும்'

காங்கிரஸ் கோரிக்கை பூர்த்தியாகாவிடில்

வார்தா ஜூலை 14—

மொத்தம் ஆயிரம் வார்த்தைகள் கொண்ட ஒரு தீர்மானத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி இப்பொழுது வெளியிட்டிருக்கிறது அப்போதைய ராஜீய நிலைமையைக் கமிட்டி பரிசீலித்திருக்கிறது.

இதுவரை காங்கிரஸ் எடுத்து வந்துள்ள நிலைமையைக் கமிட்டி விவரித்துள்ளது. பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவிலிருந்து மறையவேண்டுமென்று கமிட்டி வற்புறுத்துகிறது. அவசரப்பட்டு எந்த நடவடிக்கையிலும் இறங்கக் காங்கிரஸ் விரும்பவில்லை என்றும், நேசநாடுகளுக்குச் சங்கடமுண்டாகக்கூடிய எத்தகைய நடவடிக்கையிலும் இறங்குவதைச் சாத்தியமான வரையில் தவிர்க்கவே விரும்புவதாகவும் காங்கிரஸ் யோசனையை அங்கீகரிக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுவதாகவும் கமிட்டி கூறியிருக்கிறது.

கோரிக்கை பூர்த்தியாகாமற்போனால் தன்னுடைய ராஜீய உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவின் விடுதலையைப் பெறவும் மகாத்மாவின் தலைமையில் அஹிம்ஸா முறையில் எல்லா நடவடிக்கையும் எடுக்கும்படியான நிர்ப்பந்தம் காங்கிரஸுக்கு ஏற்படுமென அது உரைக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலிருந்து மறைந்துவிட்டால் நாட்டிலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்கள் ஒன்றுபட்டுத் தாற்காலிக அரசாங்கம் ஒன்றை அமைப்பர். இந்த அரசாங்கத்தில் எல்லாக் கக்ஷிகளின் பிரதிநிதிகளுமிருப்பர். பிற்பாடு எல்லோரும் ஏற்கக்கூடியதாக இந்திய அரசாங்கத்துக்காக ஓர் அரசியலைத் தயாரிக்க ஒரு திட்டம் வகுக்கப்படும்.

பிரச்னைகள் மிகவும் பிரதானமானவையாதலால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியே இறுதியாக முடிவு செய்யவேண்டுமென்று கமிட்டி தீர்மானித்திருக்கிறது. அ. இ. கா. கமிட்டி ஆகஸ்ட் 7-ந் திகதி பம்பாயில் ஆரம்பமாகிறது.

அன்னிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் பொதுக்காரியம் சம்பந்தமாக இருநாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பு ஏற்படவும் எதிர்கால சம்பந்தத்தைச் சரிப்படுத்திக் கொள்ளவும் சுயேச்சை இந்தியாவின் பிரதிநிதிகளும் பிரிட்டனின் பிரதிநிதிகளும் கலந்து பேசுவர்.

பொதுமக்களின் ஒன்றுபட்ட உறுதியுடனும் பலத்துடனும் ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக இந்தியா எதிர்த்து நிற்கச் சாத்தியப்படும்படி செய்யவேண்டுமென்பதே காங்கிரஸின் ஆவல்.

பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவிலிருந்து மறையவேண்டுமென்ற யோசனையை வெளியிடுகையில் பிரிட்டனுக்கோ அல்லது நேசநாடுகளுக்கோ யுத்த விஷயத்தில் சங்கடமூட்டவேண்டுமென்றோ அல்லது சீன ஆக்கிரமிப்புக்கு எந்த விதத்திலும் உதவவேண்டுமென்றோ காங்கிரஸ் விரும்பவில்லை.

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரம் மறையவேண்டுமென்ற திட்டத்தால் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்காரர்கள் எல்லோருமே போய் விடவேண்டுமென்று அர்த்தமல்ல. முக்கியமாக இந்தியாவைத் தங்களுக்கு இருப்பிடமாகக்கொண்டு மற்றவர்களைப்போலவே சரிசமமாக வாழவிரும்பும் பிரிட்டிஷ்காரர்கள் போய்விடவேண்டுமென்பதும் அத்திட்டத்தின் நோக்கமல்ல. நல்லுணர்ச்சியுடன் பிரிட்டிஷ் அதிகாரத்தை வாபஸ் பெற்றால் இந்தியாவில் தற்காலிகமாகப் பலம்பொருந்திய அரசாங்கம் நிலைபெறும். படையெடுப்பை எதிர்த்துச் சீனாவுக்கு உதவிசெய்ய இந்த அரசாங்கத்துக்கும் நேசநாடுகளுக்கும் ஒத்துழைப்பும் ஏற்படும்.

இந்த ஏற்பாட்டினால் ஆபத்துக்கள் ஏற்படலாமென்பதைக் காங்கிரஸ் உணர்கிறது. விடுதலை பெறுவதற்காகவும் முக்கியமாகத் தற்போதுள்ள நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாட்டைப் பாதுகாக்கவும் உலகத்திலுள்ள சுதந்திர இயக்கத்தைப் பெரிய அபாயங்களிலிருந்து தப்புவிக்கவும் எந்த நாடாகவிருந்தபோதிலும் மேற்படி ஆபத்துக்களைச் சமாளித்தே ஆகவேண்டும்.

காங்கிரஸ் தனது இறுதியான லட்சியம் சித்திபெறவேண்டுமென்று துடியாகவிருப்பினும் அவசரப்பட்டு எவ்வித நடவடிக்கையையும் எடுக்க விரும்பவில்லை. சாத்தியப்பட்டவரையில் நேசநாடுகளுக்குக் கஷ்டம் விளைக்கும்படியான எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள அது விரும்பவில்லை.

இந்தத் தீர்மானத்தில் கண்ட நியாயமான கோரிக்கைகளை-இந்தியாவின் நலத்தை முன்னிட்டு மாத்திரமல்ல சுதந்திரத்தை முன்னிட்டும் எந்தக் கொள்கைகளுக்காகப் போராடுவதாக நேசநாடுகள் பறைசாற்றுகின்றனவோ அக்கொள்கையை முன்னிட்டும் ஒப்புக்கொள்ளவேண்டுமெனக் காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளுகிறது. இந்த வேண்டுகோள் பலனளிக்காவிடில் அக்கிரமத்தை எதிர்க்க இந்தியாவுக்குள்ள நோக்கம், சக்தி இவற்றைக் குறைக்கக் கூடிய தற்போதைய நிலைமை நீடிக்கும்படியான நிலைமை ஏற்படும். அத்தகைய நிலைமையைக் காங்கிரஸ் கவலையுடன் தான் கவனிக்க வேண்டியிருக்கும்.

அம்மாதிரிச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் 1920-வது வருஷத்திலிருந்து திரட்டி வந்திருக்கும் தனது அஹிம்ஸா சக்தி முழுவதையும் உபயோகிக்கவேண்டிய அவசியம் ஏற்படும். அம்மாதிரி ஏற்படக்கூடிய பொதுஜன இயக்கம் மகாத்மாஜீ தலைமையில்தான் நடைபெறும்.

இப்பொழுது கிளப்பப்பட்டிருக்கும் பிரச்னைகள் இந்தியாவுக்கு மட்டுமன்றி நேசநாடுகளுக்கும் மிக முக்கியமானவையாகையால் அவர்களை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இறுதி முடிவைக் கவனிக்கும்படி சொல்லுகிறோம். இதற்காக அ. இ. கா. பம்பாயில் ஆகஸ்டு 7-ந் தேதி கூடும்.

காந்திஜி தலைமையில் நம்பிக்கை

புதியடில்லி ஜூலை 13—

காந்திஜியின் தலைமையில் பூரண நம்பிக்கை தெரிவித்தும் நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை உடனே அவருக்குப் பூரண அதிகாரம் அளிக்குமாறு சிபார்சு செய்தும் டில்லிநகரக் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இரண்டாவது யுத்த முனைக்கு ருஷியர் வற்புறுத்தல்

வாஷிங்டன், ஜூலை 16—

ருஷியாவில் ஜெர்மன் முன்னேற்றம் அதிகமாக ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை உடனே ஆரம்பிக்க வேண்டுமென்ற ருஷியர்களின் வற்புறுத்தல்களும் அதிகமாயிருக்கிறது.

இந்தப் பிரமாண்டமான நடவடிக்கையை ஆரம்பிக்கும் காலத்தை இராணுவ காரணங்களைக் கொண்டே நிர்ணயிக்க முடியுமென்பதை ருஷ்யர் உணர்ந்திருந்தபோதிலும் இப்பொழுதே உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது மிக அவசியமென்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

நேசதேசங்கள் மேற்கு ஐரோப்பாவில் ஒரு புதிய போர்முனை ஒன்றை ஆரம்பிப்பார்களேயானால், ஹிட்லர் ருஷ்யாவிலுள்ள தன்னுடைய இராணுவத்தில் குறைந்தபட்சம் பாதியையாவது மேற்கு ஐரோப்பாவிற்கு அனுப்பவேண்டியிருக்குமென்று ருஷ்யர்கள் கூறுகிறார்கள். இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவதென்றால் எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றன. இந்நடவடிக்கையால் சில தேசங்களில் ஏற்படக் கூடிய விளைவுகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு பெ. அரு. மு. சி. முத்துச்சாமிச் செட்டியார் அன் பிரதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 17ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்.	தி.	ரு.	ஊர்	பெயர்	நகைகளின் விபரம்.
1941 ஏப்ரல்					
9613	19	6	சேனியதெரு	வே சின்னையா	மனுக்கன் சிகப்புக்கல் காதுப்பூ சோடி 1
9695	24	10	உரும்பராய்	பெ அழகரெத்தினம்	இமி வெள்ளைக்கல் வைத்த தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1
1941 மே					
9807	2	44	சோனகதெரு	மு முகம்மது மீருசாய்பு	இமி கல் மோதிரம் 4ம் பொத்தான் 1ம் ஊக்கு 1
9957	12	160	நீராவியடி	ச பொ வீரசிங்கம்	ப இல்லாத இமி கல் பதக்கத்துடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1
10007	15	38	வேலணை கிழக்கு	க கந்தர்	சாதா சங்கிலி 1
10067	18	6	ஆனைப்பந்தியடி	வ சுப்பிரமணியம்	இமி வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1
1941 ஜுன்					
10308	4	21	அராலி வடக்கு	S தருமலிங்கம்	மனுக்கன் சிகப்புக்கல் வைத்த அஷ்ரக்கூடு 1
10487	18	50	அராலி வடக்கு	ச தியாகராசா	ஒன்று முரிந்த சாதா அச்சுவளையல் காப்பு சோடி 1
10577	23	12	கோண்டாவில் கிழக்கு	க சுப்பிரமணியம்	திருகில்லாத இமிகல் தோடு சோடி 1
10646	27	7	கோண்டாவில் மேற்கு	கா சுப்பையா	நாட்டுக் கடுக்கன் சோடி 1
10690	30	311	கச்சேரியடி	க சரவணமுத்து	இமி கல் பதக்கத்துடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1ம் ஒன்றுக்குத்திருகும் ஒன்றுக்குக் கல்லுமில்லாத இமி வெள்ளைக்கல் வைத்த அச்சுப் பிள்ளைக்காப்பு சோடி 2

விற்பனவு நிகழும் சித்திரபானு வருஷம் ஆடிமீ 16உ (31.7.42) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டவைகளை நீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்திஸ்மேஸ்தர்.

Mis 79 16 & 20-7-42.

(Q. 59. 18.6-42—17-9-42) (இ)

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசத்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (இ)

கச வியாதிக்கு வசிலோசைன் மருந்து

(Cure For Consumption;- Bacillozine Specific)

பலவிதமான மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி சுகப்படாமல் இருப்பதற்குக் காரணம் டியுபேக்கிள் கிருமியின் தன்மைதான். வசிலோசைன் மருந்தினுல் டியுபேக்கிள் கிருமித் தன்மையுள்ளதும் இல்லாததுமான கசம், இருமல், தொய்வு, பீனிசம், மூழங்கால் வாதம், சூலை வியாதிகளும், தலை, கண், காது, மூக்கு, முகம், வாய், தொண்டை, மூச்சுப்பை, இரத்தாசயம், ஈரல், கெற்பப்பை, சலப்பை, புண், பிளவைரோகங்களும் கெதியில் பூரண சுகத்தையடைகிறது மல்லாமல் வசிலோசைன் மருந்தைப் பாவிக்கத் தொடங்கிய 12 மணி நேரத்திற்குள் மனச் சந்தோஷத்தையும், ஊக்கத்தையும், புதிய பலத்தையும் ஆறுதலான நித்திரையையும் அடையலாம்.

வி—பியில் மருந்து பெறுவோர் ரூபா இரண்டு முற்பணம் அனுப்பவும்.

15 நாள் மருந்து ரூபா 7—75

விலாசம்:— Dr. S. V. Tambiah,
Dutch Road, Uduvil, MANIPAY, P. O.

Y 17 27-4-42—26-4-43

தி யூனியன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42—3-3-43

'ஜின்னாவையும், லீகையும் சோதித்து விடலாமே'

'என் யோசனையைக் காங்கிரஸ் ஏற்றால்...' விளையக்கூடிய பலனை ராஜாஜி விவரிக்கிறார்

ஹிந்து—முஸ்லிம்சமரஸம்ஏற்பட்டாலன்றி என் பிரசாரம் நிற்காது

சென்னை ஜூலை 10

ஸ்ரீமான். ஸி. ராஜகோபாலாச்சாரியார் தமது நிலைமையை விளக்கி இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

"அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பிரேரித்த தீர்மானத்தில் நான் குறிப்பிட்டபடி பிரதேசங்களுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கும் கொள்கையைக் காங்கிரஸ் அங்கீகரித்தால் அதை ஜனாப் ஜின்னாவும் அவருடைய லீகும் ஏற்று ஒன்றுபட்ட ராஜீய முன்னணியை வகுக்க அவர்கள் காங்கிரஸில் சேரும்படி செய்ய முடியும்" என்று ராஜாஜி கூறியுள்ளார்.

காங்கிரஸ் அங்கத்தவர் பதவியை ராஜினாமாச் செய்யத் தீர்மானித்த காரணத்தை விளக்குகையில் அவர் 'காங்கிரஸை எனது அபிப்பிராயத்துக்கு மாற்ற நான் விரும்புகிறேன். என் வேலையைப் பூரண சுதந்திரத்துடன் நடத்தச் சௌகரியப்படுவதற்காகவே முக்கியமாக நான் ராஜினாமாச் செய்தேன். ஹிந்து-முஸ்லிம் சமரஸம் ஏற்படும்வரையில் அது சம்பந்தமான என்னுடைய பிரசாரம் நிற்க முடியாது. பெயரளவில் நான் காங்கிரஸிலிருந்து விலகி இருக்கிறேனே ஒழிய என் மனமெல்லாம் அதில்தானிருக்கிறது" என்று உரைத்திருக்கிறார்.

அறிக்கை விவரம்

மேற்படி அறிக்கையின் விவரம் பின் வருமாறு:-

காங்கிரஸின் தற்போதைய கொள்கையைக் கண்டிக்கவும் காங்கிரஸின் அபிப்பிராயத்தை மாற்ற முயலவும் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு உரிமை இல்லை என்று பாத்தியம் கொண்டாடுவதை நான் ஏற்கவில்லை. என்னுடைய ராஜினாமா காரணமாக நான் சரணாகதி அடைந்துவிடவில்லை. அதை ஆக்ஷேபணையின் அறிகுறியாகக் கொள்ளலாம். என்னுடைய கருத்தை ஆதரிப்பவர்கள் என் மாதிரியே செய்வதை நான் விரும்பவில்லை. கிரமமாகப் பொறுப்பு எதையாவது ஏற்றிருந்தால் அதை விட்டு விடுவதால் சுதந்திரத்தைப் பெறலாம். சாதாரண அங்கத்தவர் பதவியையும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாகாண காங்கிரஸ் கமிட்டி இவற்றைப் போன்ற விவாதத்துக்குரிய கமிட்டிகளில் வகிக்கும் அங்கத்தவர் பதவியையும் விட்டுவிட வேண்டியதில்லை.

காங்கிரஸில் ஒரே விதமான அபிப்பிராயமுடையவர்களுக்குத்தான் இடமுண்டு என்ற வகையில் அந்த ஸ்தாபனத்தைச் செய்துவிட அகில இந்திய காங்கிரஸ் காரியக கமிட்டி ஏற்கெனவே முடிவுசெய்துவிட்டதாக நான் நம்பவில்லை. மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு தற்போதைய காரியக் கமிட்டி அங்கத்தவர்களைப்போன்ற அபிப்பிராயமுடையவர்களையே சேர்த்துக் கொள்ளுவதென்றும் முடிவு செய்யப்படவில்லை என்று நம்புகிறேன்.

தேர்தல் உறுதிமொழி

தேர்தல் காலத்தில் அபேக்ஷகர்கள் கொடுத்த உறுதிமொழி சம்பந்தமாகக் கொள்ளப்படும் வியாக்யானத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அந்த உறுதிமொழி சட்டசபையில் செய்யப்பட வேண்டிய வேலை. சட்டசபை சம்பந்தமான வேலை இவற்றைப்பற்றியதுதான் என்பதே என் அபிப்பிராயம். எனவே தேர்தலுக்குப் பிறகு ஆக்ஷேபணைகளைப் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் கமிட்டிகள் பல்வேறு விஷயங்களைப்பற்றி நிறைவேற்றும் தீர்மானங்களுக்குச் சட்டசபை அங்கத்தவர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்கள் என்று நான் கருதவில்லை.

என் பிரசாரம்

காங்கிரஸை மாற்றவே நான் விரும்புகிறேன். அத்துறையில் பூரண சுதந்திரத்துடன் பிரசாரம் நடத்தச் சௌகரியம் வேண்டுமென்பதற்காகவே முக்கியமாக என் ராஜினாமாச் செய்தேன். ஹிந்து முஸ்லிம் சமரஸம் ஏற்பட்டாலன்றி அது சம்பந்தமான என்னுடைய பிரசாரம் நிற்கமுடியாது. பெயரளவில் தான் காங்கிரஸிலிருந்து விலகியிருந்தாலும் என் மனமெல்லாம் அதிலேயே இருக்கிறது. வண்டியிலிருந்து நான் இறங்கிவிட்டது வாஸ்தவம் தான். ஆனால் ஏன் அவ்வாறு செய்தேன் தெரியுமா? உளையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் வண்டியைத் தூக்கிவிட்டு முன்னுக்குத் தள்ளுவதற்காகவே.

வேண்டுமென்றால் நானும் அமைதியைத் தேடிக் கொண்டிருக்கலாம். எல்லோருடனும் அவர்களைப் போலவே நானும் பேசிக் கொண்டு ராஜீய கண்ணியமும், தேசபக்தியும் உள்ளவன் போல நடந்துகொண்டிருக்கலாம். ஆனால் அவ்விதம் செய்வது சரியென்பதாக என் புத்தியில் படவில்லை.

(1) ஜப்பானை உருவாக எதிர்த்து நிற்பது சாத்தியமல்ல.

(2) நாம் என்ன செய்த போதிலும் பிரிட்டிஷார் நம்மை ஏமாற்றிவிடுவர். தேசப் பாதுகாப்பை நிர்மாணிக்க இயலுமாறு அவர்கள் நமக்கு அதிகாரத்தை மாற்றமாட்டார்கள்.

(3) இவ்விரண்டும் சாத்தியப்பட்டாலும் கூட நம்முடன் சேர்ந்து வேலை செய்ய ஜனாப் ஜின்னா சம்மதிக்கமாட்டார்.

இப்படியாக முக்கியஸ்தர்கள் பலர் திடமாக அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர்.

இந்த மூன்று அபிப்பிராயங்களையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. முதல் யோசனையை மறுக்கிறேன். தேசியப் புனருத்தாரணம் எதிரியை எதிர்த்துப் போராடுவதிலேதானிருக்கிறது. பணிவதில் இல்லை. தோல்வி மனப்பான்மையுள்ளவர்கள் நினைப்பதுபோல் இந்தியாவைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதல்ல. ஜப்பானே அப்படி நினைக்கவில்லை. ஆகையால்தான் நிலைமையைச் சீர்படுத்திக்கொள்ள நமக்கு இன்னும் அவகாசமளிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் கொடுத்திருக்கும் அவகாசத்தில் பெரும் பகுதியை ஏற்கெனவே வீணாக அடித்துவிட்டோம். இன்னும் கொஞ்சம் அவகாசமிருக்கிறது.

பூரா அவநம்பிக்கையின் பலன்

இரண்டாவது யோசனையையும் நான் ஒப்பவில்லை. பிரிட்டனிடம் பூராவாக அவநம்பிக்கை கொள்வது சுயநலத்துக்கோ தேசத்துக்கோ அறிகுறியாகாது. அது [illegible] நமக்குள்ள அவநம்பிக்கைக்கு அத்தாட்சி. அஹிம்ஸா தத்துவத்தின் அஸ்திவாரத்தையே அது தகர்த்துவிடும். அத்தகைய மனோபாவம் இறுதியில் பலாத்காரத்துடன் கூடிய புரட்சிக்குத்தான் தேசத்தை இழுத்துச் செல்லும்.

ஜின்னாவுக்குச் சோதனை

ஜனாப் ஜின்னா திட்டமான கோரிக்கைகளை வெளியிட்டு சமரசத்துக்கு வரமாட்டாரென்றும் எப்பொழுதும் பேரம் பேசிக்கொண்டிருப்பாரென்றும் காங்கிரஸ்காரர் நினைத்த போதிலும் ஜனாப் ஜின்னாவைச் சோதித்துவிட வேண்டியது அவசியம். ஹிந்து—முஸ்லிம் சமரசத்திற்கு எந்த விலை கொடுத்தாலும் தகும். முஸ்லிம்கள் எது கேட்டாலும் கொடுப்பதென்ற கொள்கை வெறும் தாராள மனோபாவத்தால் மட்டும் ஏற்பட்டதல்ல. அஹிம்ஸைக் கொள்கையால் ஏற்படும் இயற்கை முடிவு. அது பிரிட்டிஷ் ஆதிக்கம் வகுப்புப் பூசல் இரண்டில் எது அதிக கெடுதலென்பதை அறிந்தாலொழிய மேற்படி கோஷத்தை அர்த்தம் செய்து கொள்வது கஷ்டம்.

காலதாமதத்தால் லாபமுண்டா?

கொஞ்சநாள் தாமதித்துப் பார்ப்போமென்று சிலர் நினைக்கிறார்கள். அடுத்த மூன்று வருஷகாலத்திற்குள் முஸ்லிம் லீகின் செல்வாக்கைக் குறைத்துவிட முடியுமென்று கண்ணிருப்பவர்கள் யாராவது சொல்ல முடியுமா? காலதாமதத்தால் முஸ்லிம் லீக் கொள்கையை மாற்றிவிட முடியுமென்று யாராவது நம்புகிறார்களா? என்னுடைய திட்டத்தின் மூலம் ஜனாப் ஜின்னாவையும் முஸ்லிம் லீகையும் சோதிப்பதொன்றுதான் சரியான வழியாகும். பிராந்திய சுயநிர்ணய உரிமையைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டால் ஜனாப் ஜின்னாவையும் முஸ்லிம் லீகையும் காங்கிரஸுடன் சேர்த்து ஒரே ஐக்கிய அரசியல் முன்னணியை ஏற்படுத்தலாமென்பது எனது நம்பிக்கை.

வலிகாமம் கிழக்கு கிருஷிக பழமரச் சுகாதாரக் கைப்பணி உணவுக்காட்சி

முதலாம்பக்கத் தொடர்ச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

4 கைப்பணி: பின் வருவன செய்து காண்பிக்கப்படும்:- பனை, தாழை ஓலைகளில் பாய், அழைப்போலை, "× மாண்டல்", கைப்'பாய்க' ;சீலை, கன்வஸ், சுழிவேலை, மரவேலை, கரைமாதிரிகள், பனங்கட்டி, சவர்க்காரம், மை, கடுதாசி, தொகன் இலை, தென்னந்தும்பு வேலைகள், அடைப்பு வகைகள், பட்சிகள், பிரின், பேங்கால, பாத்திரம், கற்பூரம், வாசனைத் திரவியங்கள்.

5 உணவு:- பின் வருவன செய்து காண்பிக்கப்படும். பழங்களைப்பட்டியில் அடைத்து வைத்தல், கம்பு, சோழம், குரக்கன், ஆட்டாமா, மரவள்ளி என்பவற்றில் பலவித உணவு வகைகள், வடகம், பப்படம், சீனி, ஜாம், பானவகைகள், 'சொக்லேற்' என்பன.

பொதுஜனங்கள் யாராவது புதுவிதமான உணவுவகை, பானவகை செய்து காட்டினால் பரிசுக்குரியவராவர்.

மிருகம்: யாழ்ப்பாண மிருகவைத்தியரால் ஆடு மாடுகளுக்கு கலமடித்தல், வெண்ணெய், பாற்கட்டி எடுத்தல் செய்து காட்டப்படும்.

ஆகாயப் படைப் பாதுகாப்பு:- பிரதமசிகிச்சை, நெருப்பணைத்தல் என்பன செய்து காட்டப்படும். மேற்படி பாதுகாப்புப் பொருள்கள் வைப்பதற்கெனப் பிரத்தியேக ஒரு மண்டபம் உண்டு.

பாடசாலை விஷயங்கள்:- பின்வருவனவற்றுக்குப் பரிசில் கோலாட்டம், சரீர அப்பியாசம், தோட்டம், ஓவியம், கைவேலை, தையல், சுகாதாரக் காட்சிப் பொருள்கள்.

மேற்படி விஷயங்களில் பங்குபற்றும்படி பாடசாலைகளை வேண்டுகிறோம்.

உளச் சுவைப்பகுதி:- பின்வருவன நிகழும். விகட நாடகம், பாவைக் கூத்து, மணிமந்திரக் காட்சி, மாயாதீபக் காட்சி, காவடி, பரத நாட்டியம், பஜனை.

—கடித

மகாத்மா காந்தியின் திட்டம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பர இலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் இ. வில்லியர்ஸ் வார்தாவுக்கு வந்து பண்டித ஜவஹருடன் கலந்து பேசியதை இதோடு சம்பந்தப்படுத்துகிறார்கள். முக்கிய தீர்மானத்தைப் பற்றிய விவாதம் நீடிக்குமெனத் தெரிகிறது. (ஹிந்து)

ராஜாஜி ராஜிநாமா

வாரதா ஜூலை 10

சென்னைச் சட்டசபை அங்கத்தினர் பதவியையும் காங்கிரஸ் பதவிகளையும் ராஜாஜி விட்டுவிட்ட செய்தி இங்குஎட்டியதும் இங்குள்ள பலரும் மிக வருந்தினர். அநுபவம் மிகுந்தவரும் பலநாளாகக் காங்கிரஸுக்கு அரிய ஆலோசனைகள் கூறி உதவி வந்தவருமான ராஜாஜி காங்கிரஸிலிருந்து விலகியதற்காக அங்கத்தினர்கள் அனைவருமே கவலைப்படுகிறார்கள். இச்சிறு விஷயத்துக்காக அவர் இவ்விதம் விலகி விட்டதைப்பற்றி அவர்கள் வருந்துகிறார்கள்.

பஞ்சாப் முஸ்லிம் மாணவர் சம்மேளனத் தலைவர் ராஜாஜியைப் பாராட்டி அவருக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார். அதில் அன்னியர் படையெடுப்பிலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற அவர் தைரியத்துடன் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிக்கு ஆதரவு அளிப்பதாகவும், ஜனாப் ஜின்னாவுடன் சேர்ந்து அவர் நாட்டுக்குச் சரியான வழிகாட்ட வேண்டுமென்றும் பாஞ்சால நாட்டுக்கு வரும்படியும் குறிப்பிட்டிருக்கிறார்.

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருகலம்	ரூபா 10-00	அரைக்கலம்	ரூபா 6-00
கால்கலம்	ரூபா 4-00	ஒரு அங்குலம்	ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் [illegible] ஒழுங்கு செய்யலாம். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரிக்கிரயம்

யாழ்ப்பாணம் [illegible]	தமிழ் ரூபா 6-00	இலங்கையில் தமிழும்	9 0
இந்தியா	8-00	இலங்கையில் தமிழும்	12-00
தொலைநாடு பகுதி	9-00	இலங்கையில் தமிழும்	13-00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

வீணான அவநம்பிக்கை கொள்ளுவானேன்?

முஸ்லீம்களுக்கு மகாத்மா அளிக்கும் உறுதி

புதிய இயக்கத்தின் நோக்கம்

ஆமதாபாத் ஜூலை 12

மகாத்மா காந்தி 'முஸ்லிம் நிருபர்களுக்கு' என்றதலைப்பிட்டு 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் முஸ்லிம்களுடன் முதலில் சமாதானம் செய்து கொள்ளாமல் இந்தியாவின் விடுதலைக்குப் பொதுஜன இயக்கம் ஒன்றைத் தாம் ஆரம்பிக்க விரும்புகிற காரணத்தை விளக்கியிருக்கிறார். தாம் எப்போதும் முஸ்லிம்களுக்கு எவ்வித பாதகமும் விளைவிக்க நினைக்கவில்லையென்றும் அவர் உறுதி கூறியிருக்கிறார்.

வியாசத்தின் விவரம்

முஸ்லிம்களுடன் நான் முதலில் சமரஸம் செய்து கொள்ளாமல் நாட்டின் விடுதலைக்காகப் பொதுஜன இயக்கம் ஆரம்பிக்க முயலுவதைப் பற்றி முஸ்லிம்கள் ஏராளமாக எனக்குக் கடிதங்கள் எழுதி வருகிறார்கள். ஆதியில் எனக்கும் கூட அவ்வித எண்ணமிருந்தது. நான் முஸ்லிம்களின் மனதை நன்கறிய முடியவில்லை. அதற்காக நான் ஏதாவது முயற்சி செய்தால், முஸ்லிம் லீக் குறுக்கே நிற்கிறது; 'லீக்' பத்திரிகைகளை நான் படித்துப் பார்க்கவும் முயலுகிறேன். அதிலிருந்து லீகின் அபிப்பிராயம் இன்னதென்று சற்று அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அவர்கள் என்னை நம்பவே கூடாதென்று சொல்லுகிறார்கள். கிலாபத் இயக்க காலத்தில் நான் அவர்களுக்காகச் செய்த ஊழியத்தையும் அவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஆனால், இந்த க்ஷணம் அவர்கள் மனதில் எப்போதும் நிலைத்திராது. எந்த முஸ்லிமுக்கும் முஸ்லிம்களின் க்ஷேமத்துக்கும் நான் எக்காலத்திலும் எவ்விதப் பாதகமும் செய்ததில்லை. நல்ல வேளையாக இப்போதுகூட எனக்குக் கணக்கற்ற முஸ்லிம் நண்பர்களிருக்கிறார்கள்.

முஸ்லீம்களுக்கு என் விஷயமாக ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையைப் போக்குவதெப்படியென எனக்குத் தெரியவில்லை. "பாகிஸ்தானுக்கு இணங்கி விட்டால்" யாவும் சரியாகிவிடும் என்று சிலர் கூறுகிறார்கள். நான் அதற்கு இணங்கிவிடுவது என் கையில் இல்லை. அந்தக் கோரிக்கை நியாயமானது என்று என் மனதுக்குத் தோன்றினால் நானே அதற்காக லீகுடன் சேர்ந்து உழைப்பேன். ஆனால், அவ்விதம் என் மனதுக்குத் தோன்றவில்லை. என் மனதுக்குத் திருப்தி ஏற்படும்படி பாகிஸ்தானைப்பற்றி எனக்கு ஒருவரும் விளக்கமாகச் சொல்லவில்லை. பாகிஸ்தானை வெறுப்பவர்கள் கூறும் காரணங்களைக் கொண்டு நான் ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. பாகிஸ்தான் வேண்டுமெனக் கோருபவர்கள்தான் தங்கள் கோரிக்கைகளை நன்கு விளக்க முடியும். ஆகவே அவ்விதம் யாராவது எனக்கு விளக்கம் செய்ய வேண்டும். பாகிஸ்தானை விரும்புபவர்கள் எப்போதாவது சிநேக முறையில் அவர்களின் விரோதிகளைக் கண்டு அவர்களைத் தங்கள் வழிதிருப்ப ஏதாவது முயற்சி செய்ததுண்டா? காங்கிரஸ் மனமாற்றம் கொள்ளத் தயாராகத்தானிருக்கிறது. என்னைப் பற்றிக் கவனிக்க வேண்டாம்.

பிரிட்டிஷ் ஆதிக்கம் மறைந்தால் —

சர்வவல்லமையுடைய பிரிட்டிஷ் ஆதிக்கம் மறைந்தால் என்ன நடக்கும்? நாம் எவ்விதம் நடக்கிறோமென்பதைப் பொறுத்தே பிறகு மற்றக் காரியங்களை நிர்ணயிக்க வேண்டும். நாம் அப்போது நமக்குள்ளேயே பேசிக்கொள்ளலாம். அல்லது ஒரு சமாதானமாகப் போய்ப் பொதுஜனங்களின் சார்பாக ஜனநாயக முறையுடன் கூடிய ஒரு அரசாட்சியை ஸ்தாபிக்கலாம். அது ஜனநாயக அரசியலாகவாவது இருக்க வேண்டும். அல்லது [illegible] ஏதேச்சாதிகாரமாகவாவது இருக்க வேண்டும். பிரிட்டிஷ் சர்க்காருடன் சமரஸம் என்ற பேச்சுக்கு இப்போது இடமேயில்லை. அவ்வித சமரஸ முயற்சி நடக்க வேண்டுமென்றால் முதலில் லீகும் காங்கிரஸும் ஒன்றுபடவேண்டும். அது இப்போது சாத்தியமில்லையென்பதே என் கருத்து; ஆகவே பிரிட்டிஷாருடன் சமரஸம் ஏற்படுவதென்றால் அவர்களின் 'ஆசி'யுடன் இங்கு முடிந்த இந்தியா அதன் இஷ்டப்படி நடக்கட்டும் என்ற எண்ணத்துடன் இந்தியாவை விட்டு அவர்கள் போய்விட வேண்டும்; பிரிட்டிஷார் விலகிவிடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது ஒருக்கால் எந்த அரசியலும் இங்கு நடைபெற முடியாமல் போகலாம். மத்திய சர்க்கார் எதுவும் இராது. அப்போது வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றபடி இராஜ்ய அதிகாரம் அதிகமுடைய கட்சியினர்களே இந்தியாவில் அரசாட்சி செலுத்துவார்கள். பொதுஜனங்கள் அதற்கிணங்கினால் அந்த ஆட்சி நடக்கும். அப்போது முஸ்லிம்கள் பாகிஸ்தான் கேட்கலாம். ஒருவரும் அவர்களைத் தடுக்கமுடியாது; ஹிந்துக்களும் அவ்விதமே கேட்கலாம். சீக்கியர்களும் தாங்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தலாம்; இவ்விதமெல்லாம் சௌகரியம் போனால் இதற்கு முடிவே கிடையாது. வீணான இந்த யூகங்களுடன் நான் இன்னொன்றும் சேர்க்க விரும்புகிறேன்.

காங்கிரஸும் லீகும் நன்கு அமைக்கப்பட்ட பெரிய ஸ்தாபனங்களாக இருப்பதால், அவையிரண்டும் ஒன்றுபட்டுத் தற்காலிகமாக யாவரும் அங்கீகரிக்கக்கூடிய ஒரு அரசியலை ஏற்படுத்தலாம். அதன்பின் ஜனப்பிரதிநிதி சபையையும் கூட்டலாம்.

இயக்கத்தின் நோக்கம்

நான் ஆரம்பிக்கவிருக்கும் இயக்கத்துக்கு ஒரு நோக்கம் தான் உண்டு; அதாவது பிரிட்டிஷ் ஆதிக்கம் மறைய வேண்டுமென்பதே. அந்த ஆதிக்கம் மறைந்து ஸ்திரமான ஒரு ஆட்சி ஏற்பட்டால், அதாவது இந்த நல்ல சம்பவம் நிகழுமானால் யுத்தத்தின் கதியைத் திட்டமாக அஹிம்ஸா முறையில் நிர்ணயித்து விடலாம். இந்த யுத்த காலத்தில் இந்தியா வேறு முறையில் தனது பலத்தைக் காட்ட முடியாது. முஸ்லிம்கள் பாகிஸ்தானில் கருத்துக் கொண்டிருப்பதோடு இந்தியா சுயேச்சை யடையவும் விரும்புகிறார்கள். அப்படியானால் அவர்கள் என் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாதா? அவர்கள் பிரிட்டிஷ் உதவியால்தான் தங்களுக்கு பாகிஸ்தான் கிடைக்குமென நினைத்தால் அது வேறு கதை; அதில் எனக்கு எவ்வித சம்பந்தமுமில்லை.

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்டர். S. சாஸ் பத்திராஜு

இப்போது கிறைண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரிப்போலா, வடமேல்மாகாணம்.

Y115 18-5-42—17-8-42

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on monday 20th July, 1942.